இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டம்

[1991, பெப்புருவரி மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

[1991, மாச்சு மாதம் 01 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 3.60 தபாற் செலவு: ரூபா 3.10

# 1991 -ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டம்.

[1991, பெப்புருவரி மாதம் 23ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப் பட்டது]

ச. வ.—ஓ 53/87

## 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும், 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :— 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்கச் சட்டத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) ஓர் அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பவரே ஒரு நெற்காணிப் பரப்பைப் பயிரிடுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்கு அமைவாக, காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டதான அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருக்கின்றவரான வேறெவரேனும் ஆளினால் அவருக்கு வாடகைக்கு விடப்பட்டதான நெற்காணிப் பரப்பைப் பயிரிடுகின்றவரான ஆளெவரும், இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஒரு வாரப் பயிர்ச்செய்கையாளரல்லர் எனக் கருதப்படுதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் சொற்களைச் சேர்த்துக் கொள்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"இப்பிரிவின் நோக்கத்திற்காக, வாரப் பயிர்ச்செய்கையாளரொருவரின் வாழ்க்கைத் துணையொருவரால் அல்லது பதினெட்டு வயதிற்குக் குறைந்த வயதுடைய பராயமடையாத பிள்ளையொன்றினால் பயிரிடப்படும் நெற்காணியெதுவும் அந்த வாரப் பயிர்ச்செய்கையாளரால் பயிரிடப்படும் நெற்காணியாகக் கருதப்படுதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அந்தப் பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(3) நெற்காணிப் பரப்பொன்றின் வாரப் பயிர்ச்செய்கையாளரொருவர், அத்தகைய காணிப்பரப்பிலிருந்து தாம் வெளியேற்றப்பட்டுள்ளார் என ஆணையாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்குமிடத்து, ஆணையாளரானவர், அத்தகைய ஆள் வெளியேற்றப்பட்டுள்ளாரா என்பதனை முடிவுசெய்யும் நோக்கத்திற்காக விசாரணையொன்றை விசாரணை அலுவலர் ஒருவர்மூலம் நடாத்துவித்தல் வேண்டும்.".

2—டீ 011995—(1450) (91/01)

(ஆ) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "ஆணையாளரின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "விசாரணை அலுவலரின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவை இடுவதன்மூலமும் :

"(6) அத்தகைய நெற்காணிப்பரப்பின் நிலக்கிழாருக்கும், வெளியேற்றப்பட்ட ஆளுக்கும், விசாரணையின்போது, நேரில் அல்லது பிரதிநிதி ஒருவர்மூலம் தம்பக்க வழக்கை எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பம் ஒன்றைக் கொடுத்தல் வேண்டும். அத்தகைய விசாரணையின்பின்னர் விசாரணை அலுவலரின் தீர்ப்பானது எழுத்தில் ஆணையாளர் நிலக்கிழார், வெளியேற்றப்பட்ட ஆள் என்போருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். நிலக்கிழார் அல்லது வெளியேற்றப்பட்ட ஆள் அத்தகைய தீர்ப்பினால் இன்னலுறுவாரானால், அத்தீர்ப்பானது அவருக்கு அறிவிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக, மற்ற ஆளை, எதிராளியாகக்கொண்ட எழுத்திலான மனு ஒன்றின்மூலம், சட்டம் பற்றிய விடயமொன்றின்மீது அத்தீர்ப்புக்கு எதிராக, எந்த மாகாணத்தில் அத்தகைய நெற்காணி அமைந்துள்ளதோ அந்த மாகாணத்திற்கென பாகம் IV (அ) இன்கீழ் நியமிக்கப்பட்ட மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய மனுவின் பிரதியொன்று மேன்முறையீடு செய்யப்படும் நேரத்தில், ஆணையாளருக்குப் பதிவுத்தபால்மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அதற்காக அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள், அத்தகைய தீர்ப்பிலிருந்து மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதவிடத்து, அத்தகைய தீர்ப்பு இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும் என்பதுடன் அது ஏதேனும் நீதிமன்றத்திலோ அல்லது நியாயசபையிலோ கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.";

(ii) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(7) மூன்றும் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விசாரணையொன்றில், விசாரணை அலுவலரானவர்—

(அ) வெளியேற்றுகை நிறுவப்பட்டுள்ளதெனத் தீர்மானித்திருந்து, அத்துடன் மேன்முறையீட்டுக்கென அனுமதிக்கப்பட்டுள்ள காலத்திற்குள்ளாக, அத்தகைய தீர்ப்பிலிருந்து மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதிருக்குமிடத்து, அல்லது மீளாய்வுச் சபையானது, அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மேல், வெளியேற்றுகை நிறுவப்பட்டுள்ளதென்ற, விசாரணை அலுவலரின் தீர்ப்பை உறுதிப்படுத்தியுள்ளவிடத்து; அல்லது

(ஆ) வெளியேற்றுகை நிறுவப்படவில்லையெனத் தீர்மானித்திருந்து, அத்துடன் மேன்முறையீட்டில் மீளாய்வுச் சபையானது, விசாரணை அலுவலரின் தீர்ப்பை மாற்றி வெளியேற்றுகை நிறுவப்பட்டுள்ளதெனத் தீர்மானிக்குமிடத்து—

(i) வெளியேற்றப்பட்ட ஆள் நெற்காணிப் பரப்பின் பயன்பாட்டையும் இருப்பாட்சியையும் மீளப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்;

(ii) ஆணையாளரானவர், விடயத்துக்கேற்றுப்போன்று, விசாரணை அலுவலரின் அல்லது மீளாய்வுச் சபையின் தீர்மானத்தைப் பெற்றுக்கொண்டதன்மேல், அத்தகைய நெற்காணிப்பரப்பின் இருப்பாட்சியைக் கொண்டிருப்பவரான ஒவ்வோர் ஆளும், அந்தக் கட்டளையில் குறித்துரைக்கப்படவேண்டியதான அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அக்காணியைவிட்டு வெளியேறவேண்டுமென எழுத்தில் கட்டளையிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறினால், அவர் அத்தகைய காணியிலிருந்து 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக வெளியேற்றப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(iii) அத்தகைய காணியின் நிலக்கிழாரானவர், (1) ஆம் உட்பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆளின் வெளியேற்றுகைத் தேதியன்று தொடங்கி, எத்தேதியன்று அவ்வாள் அதன் உடைமையை மீளப் பெறுகின்றாரோ அந்தத் தேதியன்று முடிவுறுகின்ற காலப்பகுதியின்போதான ஒவ்வொரு நாளுக்குமென அத்தகைய ஆளுக்கு, விசாரணை அலுவலரானவர் அல்லது மீளாய்வுச் சபையானது, அந்த ஆள் அத்தகைய நிலக்கிழாரின் அறிவு, சம்மதம் அல்லது உடந்தை இல்லாமல் வெளியேற்றப்பட்டார் எனத் தீர்மானித்தாலன்றி விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் நட்டஈட்டை வழங்குதல் வேண்டும் :

ஆயின், 38 அ என்னும் பிரிவின்கீழ் பயிரிடப்பட்டிருக்கக்கூடியதான அத்தகைய காணிப்பரப்புக்கு, இவ்வுட் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின் பாகமெதற்கும் நட்டஈடு எதுவும் கொடுபடற்பாலதாதலாகாது."

(இ) அந்தப் பிரிவின் (9) ஆம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்பு வாசகத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"ஆயின் மேலும், ஏதேனும் நெற்காணிப்பரப்பானது அத்தகைய காணிப்பரப்பின் சொந்தக்காரரது எழுத்தி

லான சம்மதத்தைப் பெருது குத்தகை கொள்பவர் ஒருவரால் கீழ்க்குடி வாரக்காரரொருவருக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருக்குமிடத்து :—

(அ) கீழ்க்குடிவாரக்காரரானவர், அத்தகைய காணி தொடர்பில் வாரப் பயிர்ச்செய்கையாளர் ஒருவரின் உரிமை எதனையும் பெறுவதற்கு உரித்துடையவராதலாகாது ;

(ஆ) ஆணையாளரானவர், கட்டளையிற் குறிப்பிடப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னதாக, அத்தகைய காணியைவிட்டு வெளியேற வேண்டுமென கீழ்க்குடி வாரக்காரருக்கு எழுத்தில் கட்டளையிடுதல் வேண்டுமென்பதுடன், அக்கீழ்குடி வாரக்காரர் அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறினுல் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய சரப்பிலிருந்து வெளியேற்றப்படுதலும் வேண்டும்;

(இ) சொந்தக்காரரானவர், 4 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய காணியை பயிரிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்" ;

(ஈ) அப்பிரிவின் (II) உட்பிரிவை உடனடுத்து, அப்பிரிவின் (IIஅ) என்னும் உட்பிரிவாகப் பயனுற வேண்டியதான பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(11அ) 1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தினுல், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் LXVI ஆம் அத்தியாயத்துக்கு உட்புகுத்தப்பட்ட எதுவும், இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் வரும் நெற் காணியை பாதிக்கின்ற பிணக்கொன்று தொடர்பில் மேற்கூறப்பட்ட அத்தியாயத்தின் கீழ் விசாரணையொன்றை நடாத்துவதற்கு அல்லது கட்டளையெதனையும் ஆக்குவதற்கு சிறுகோரிக்கைகள் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவருக்குத் தத்துவமளிப்பதாக வாசிக்கப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5அ, 5ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

5. முதன்மைச் சட்டவாக்கத்தில் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தில் 5 அ அத்துடன் 5 ஆ என்னும் புதிய பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஆலயங்கள் முதலியவற்றுல் சொந்தமாக வைத்திருக்கப்படும் காணிக்கான விதிவிலக்கு.

5அ. (1) ஓர் ஆலயத்தின், கோவிலின், திருச்சபையின் எவரேனும் விகாராதிபதி அல்லது பிரதம குரு அல்லது ஒரு பள்ளிவாசலின் எவரேனும் நம்பிக்கைப் பொறுப்பாளர் இப்பிரிவு ஆக்கப்பட்டுப் பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக, அத்தகைய ஆலயத்தால், கோவிலால், திருச்சபையால் அல்லது பள்ளிவாசலால்

சொந்தமாக வைத்திருக்கப்படும் இரண்டு ஏக்கரை விஞ்சாத காணிப்பரப்புக்கு, இச்சட்டத்தின் 2 வது பிரிவை ஏற்புடைத்தாக்குவதிலிருந்து விலக்களிக்கப் படுதல் வேண்டுமென ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்யலாம்.

(2) ஆணையாளரானவர் அத்தகைய விண்ணப்பத்தின்மீது அத்தகைய வாரப் பயிர்ச் செய்கையாளர் எவரேனும் இருப்பின் அவருக்குப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு வாய்ப்பொன்று அளித்து, விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும். விசாரணையின் பின்னர் ஆணையாளர், ஆலயத்தை, கோவிலை, திருச்சபையை அல்லது பள்ளிவாசலைப் பேணுவதற்கு நியாயமாகத் தேவையானதும் இரண்டு ஏக்கரை விஞ்சாததுமான விஸ்தீரணத்தைக் கொண்ட, அத்தகைய காணிப்பரப்புக்கு, 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாவதிலிருந்து விலக்களிக்கின்ற தீர்மானத்தைச் செய்தல் வேண்டும். ஆணையாளர் மேலும் ஒவ்வொரு வாரப் பயிர்ச்செய்கையாளருக்கும் விண்ணப்பகாரரால் கொடுபடற்பாலதான நட்டஈட்டின் அளவையும் அத்துடன், எந்தத் தேதிக்கு முன்னதாக அத்தகைய நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டுமோ அந்தத் தேதியையும் தீர்மானித்தலும் வேண்டும்.

(3) ஆணையாளரின் தீர்மானத்தால் இன்னலுறுகின்ற ஆளெவரும் அத்தீர்மானத்திற்கு எதிராக மீளாய்வு சபைக்கு மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், மீளாய்வுச் சபையானது ஆணையாளரின் தீர்மானத்தை உறுதிப்படுத்தலாம் அல்லது வேறுபடுத்தலாம். அத்தகைய மேன்முறையீட்டின்மேல் மீளாய்வுச் சபையால் செய்யப்பட்ட தீர்மானமானது இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

(4) மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடெதுவும் செய்யப்படாதவிடத்து அல்லது மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்து அத்துடன் மீளாய்வுச் சபையானது ஆணையாளரின் தீர்மானத்தை உறுதிப்படுத்தியிருக்குமிடத்து, ஆணையாளரானவர் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் காணியைவிட்டு வெளியேற வேண்டுமென வாரப்பயிர்ச்செய்கையாளருக்குக் கட்டளையிடுதல் வேண்டும்.

(5) வாரப்பயிர்ச் செய்கையாளரானவர், அத்தகைய கட்டளைக்கிணங்க, இடப்பரப்பைவிட்டு வெளியேறத் தவறுகின்றவிடத்து, 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அவர் வெளியேற்றப்படலாம். ஆயின், ஆணையாளரானவர், இப்பிரிவின் கீழ் விண்ணப்பகாரரால் அத்தகைய வாரப் பயிர்ச்செய்கையாளருக்குக் கொடுக்குமதியாக

வுள்ள நட்டஈடு முழுமையாகச் செலுத்தப்பட்டதன் பின்னர் மட்டுமே, அவரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

குறித்த சில சொந்தக்காரர்களால் சொந்தமாக வைத்திருக்கப்படும் நெற்காணிக்கான விதிவிலக்கு.

5ஆ. (1) அவரது வாரக்குடியிருப்பாளரால் செலுத்தப்படும் வாடகை மட்டுமே ஒரே ஒரு வருமானமாகக் கொண்டுள்ளவரான நெற் காணியின் சொந்தக்காரரொருவர், இப்பிரிவு ஆக்கப்பட்டதிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக, ஆணையாளருக்கு, இச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை ஏற்புடைத்தாக்குவதிலிருந்தான விதிவிலக்களிப்பொன்றுக்கான விண்ணப்பத்தைச் செய்யலாம். இப்பிரிவின் நோக்கத்துக்காக நெற்காணியொன்றின் சொந்தக்காரரினது வாழ்க்கைத் துணையினாலும் பதினெட்டு வயதுக்குக் குறைந்த வயதுடைய பராயமடையாத பிள்ளையினாலும் சொந்தமாக வைத்திருக்கப்படும் நெற் காணியானது, அத்தகைய சொந்தக்காரினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் நெற்காணியெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஆணையாளரானவர் அத்தகைய விண்ணப்பத்தின் மீது அத்தகைய நெற்காணியின் வாரப் பயிர்ச் செய்கையாளருக்கு பிரதிநிதித்துவம் செய்வதற்கான வாய்ப்பொன்று அளித்து விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும். ஆணையாளர் (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் திருப்தி செய்யப்பட்டிருந்தால், ஒரு ஏக்கரை விஞ்சாத அத்தகைய காணியின் பரப்பொன்றை, 2 ஆம் பிரிவின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கின்ற தீர்மானத்தினைச் செய்தல் வேண்டும். ஆணையாளர், மேலும் ஒவ்வொரு வாரப் பயிர்ச்செய்கையாளருக்கு விண்ணப்பகாரரால் கொடுபடற்பாலதான நட்டஈட்டின் அளவையும், அத்துடன் எந்தத் தேதிக்கு முன்னதாக அத்தகைய நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டுமோ அந்தத் தேதியையும் தீர்மானித்தலும் வேண்டும்.

(3) ஆணையாளரின் தீர்மானத்தினால், இன்னலுறுகின்ற ஆளெவரும், அத்தீர்மானத்திற்கெதிராக மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடுசெய்யலாம் என்பதுடன் மீளாய்வுச் சபையானது, ஆணையாளரது தீர்மானத்தினை உறுதிப்படுத்தலாம் அல்லது வேறுபடுத்தலாம். அத்தகைய மேன்முறையீட்டில் மீளாய்வுச் சபையால் செய்யப்பட்ட தீர்மானமானது இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

(4) மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடெதுவும் செய்யப்படாதவிடத்து அல்லது மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்து, அத்துடன் மீளாய்வுச் சபையானது ஆணையாளரின் தீர்மானத்தினை உறுதிப்படுத்தியிருக்குமிடத்து, ஆணையாளரானவர் கட்

டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னதாக காணியைவிட்டு வெளியேற வேண்டுமென வாரப்பயிர்ச் செய்கையாளருக்குக் கட்டளையிடுதல் வேண்டும்.

(5) வாரப்பயிர்ச் செய்கையாளரானவர், அத்தகைய கட்டளைக் கிணங்க, காணிப்பரப்பை விட்டு வெளியேறத் தவறுகின்றவிடத்து, 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அவர் வெளியேற்றப்படலாம்; ஆயின் ஆணையாளரானவர், இப்பிரிவின் கீழ் விண்ணப்பகாரரால் அத்தகைய வாரப் பயிர்ச் செய்கையாளருக்குக் கொடுக்குமதியாகவுள்ள நட்டஈடு முழுமையாகச் செலுத்தப்பட்டதன் பின்னர் மட்டுமே அவரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது. — முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை நீக்குதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— — முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"வாரப்பயிர்ச் செய்கையாளரொருவரின் உரிமைகள் சென்றடையும் விதம்.

(1) எந்த வாரப் பயிர்ச் செய்கையாளரொருவர் ஏதேனும் காணியை, வேறெவரேனும் வாரப் பயிர்ச் செய்கையாளருடன் சேர்ந்து ஒன்றில் கூட்டாகவோ அல்லது சுழற்சி முறையிலோ பயிரிடுகின்றாரோ அந்த வாரப் பயிர்ச் செய்கையாளர் ஒருவர் தவிர்ந்த அத்தகைய நெற் காணிப்பரப்பு எதனதும் வாரப் பயிர்ச் செய்கையாளரொருவர் இறக்கின்றவிடத்து, இச்சட்டத்தின்கீழ் அத்தகைய காணி தொடர்பிலான அவரது உரிமைகள் அத்தகைய வாரப் பயிர்ச்செய்கையாளருக்குப்பின் உயிர்வாழும் வாழ்க்கைத் துணைக்கும், அத்தகைய வாழ்க்கைத் துணை இல்லாதவிடத்து அத்தகைய வாரப் பயிர்ச் செய்கையாளரின் பிள்ளைகளில் ஒருவரை மட்டுமே சென்றடைதல் வேண்டுமென்பதுடன் ஒன்றுக்குமேற்பட்ட பிள்ளைகள் இருக்கின்றவிடத்து, ஏனையோரைவிட வயதில் மூத்த பிள்ளையே விரும்பப்படுதல் வேண்டும். ஆயினும், இறந்த வாரப் பயிர்ச் செய்கையாளரின் உரிமைகளுக்குப் பின்னுரிமையாளராக வருபவர் நெல் பயிரிடுவதனைத் தமது பிரதான தொழிலாகக் கொண்டிருத்தல் வேண்டும்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— — முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(2) எவ் விஸ்தீரணமுள்ள எந்த காணியின் வாரப் பயிர்ச் செய்கையாளர் ஒருவர், அவசியமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய விசாரணையின் பின்னரும் அத்தகைய நியதிகள் மீதும், அவரினது எழுத்திலான அங்கீகாரத்துடன், நிலக் கிழாரே அத்தகைய காணிப்பரப்புக்குச் சொந்தக்காரராக இருந் தால் அத்தகைய காணிப்பரப்பு தொடர்பிலான அவரது உரிமை களை நிலக்கிழாருக்கு உரித்து மாற்றலாம். அத்தகைய உரித்து மாற்றலானது, இவ்வுட்பிரிவின் அடுத்துவரும் ஏற்பாடுகளுக்கு இணங்க இருத்தல் வேண்டும் :—

(அ) நெற்காணியொன்றின் வாரப் பயிர்ச் செய்கையாளர் அக் காணியில் அவருக்கிருக்கும் அக்கறையை உரித்து மாற்ற உத்தேசித்திருக்குமிடத்து அவர் அக்காணியை உரித்துமாற்ற இருக்கும் தமது முன்னத்தைப்பற்றியும் அக்காணியில் அவருக்கிருக்கும் அக்கறையை என்ன விலைக்கு உரித்துமாற்றப் போகிறார் என்பதுபற்றியும் அக் காணியின் சொந்தக்காரருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்று, அந்நெற்காணி எக்கமநலச் சேவைகள் குழுவின் அதிகார இடப்பரப்புக்குள் அமைந்திருக்கிறதோ, அக்கமநலச் சேவைகள் குழுவுக்கு வாரப்பயிர்ச் செய்கையாளரினால் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) சொந்தக்காரர், அத்தகைய நெற்காணியில் வாரப் பயிர்ச் செய்கையாளருக்குள்ள அக்கறையை, வாரப் பயிர்ச் செய்கையாளரினால் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்குக் கொள்வனவு செய்ய விருப்பப்பட்டால், தமது விருப்பார் வத்தைக் கமநலச் சேவைகள் குழுவுக்குத் தெரிவித்தல் வேண்டும் என்பதுடன், அக்குழுவானது உரித்துமாற்றல் எக்காலப் பகுதியினுள் பூர்த்தியாக்கப்படல் வேண்டு மென்பதை நிர்ணயித்தல் வேண்டும்.

(இ) சொந்தக்காரர், அத்தகைய நெற் காணியில் வாரப் பயிர்ச் செய்கையாளருக்குள்ள அக்கறையைக் கொள்வனவு செய் வதற்கு விருப்பமாயிருந்து, ஆனால் வாரப் பயிர்ச் செய் கையாளரினால் குறிப்பிடப்பட்ட விலை மிகையான தெனக் கூறினால், கமநலச் சேவைகள் குழுவானது, வாரப்பயிர்ச் செய்கையாளருடனான கலந்தாலோசனை யுடன், அதன் அபிப்பிராயப்படி நியாயமான விலையொன் றைத் தீர்மானிக்கலாம் என்பதுடன், எக்காலப் பகுதியி னுள் உரித்து மாற்றமானது செய்யப்படல் வேண்டுமென் பதையும் நிர்ணயிக்கலாம்.

(ஈ) சொந்தக்காரர், அத்தகைய நெற் காணியில் வாரப் பயிர்ச் செய்கையாளருக்குள்ள அக்கறையைக் கொள் வனவு செய்வதற்கு விருப்பமில்லாதிருக்கின்றவிடத்து அல்லது கமநலச் சேவைகள் குழுவினால் நிர்ணயிக்கப் பட்ட விலைக்குக் கொள்வனவு செய்ய விருப்பமில்லா திருக்கின்றவிடத்து, அல்லது விடயத்துக்கேற்றவாறு,

வாரப்பயிர்ச் செய்கையாளரினுல் குறிப்பிடப்பட்ட அல்லது கமநலச் சேவைகள் குழுவினுல் தீர்மானிக்கப்பட்ட விலைக்கு அத்தகைய அக் கறையைக் கொள்வனவு செய்ய உடன்பட்டுவிட்டு, அதற்கென நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதியினுள் உரித்துமாற்றலைப் பூர்த்தி செய்திருக்கின்ற விடத்து, கமநலச் சேவைகள் குழுவானது, சான்றிதழொன்றை, அப்பயன்பட வழங்குதல் வேண்டும்.";

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் கைமாற்றம் அல்லது ஒப்பளிப்பு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் கைமாற்றம்" என்னும் சொற்களைப் பதிலிடுவதன் மூலமும் ;

(இ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) அந்தப் பிரிவுக்கான ஓரக்குறிப்பில், "கைமாற்றுதலும் ஒப்பளித்தலும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "கைமாற்றுதல்" என்ற சொல்லைப் பதிலிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 12அ என்னும் பிரிவை உட் புகுத்தல்.

9. பின்வரும் புதிய பிரிவு பன்னிரண்டாம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அப்பிரிவானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"நெற்காணிகளின் விற்பனையும் வாரப் பயிர்ச்செய்கை உரிமைகளும்.

12அ. (1) எந்நெற்காணியொன்று தொடர்பில் வாரப் பயிர்ச் செய்கையாளர் ஒருவர் இருக்கின்ருரோ, அந் நெற்காணியின் நிலக்கிழார் அத்தகைய காணியை விற்பதற்கு உத்தேசிக்குமிடத்து, அவர் முதலில், அத்தகைய காணியை அவர் விற்க இருக்கும் அவரது முன்னத்தைப் பற்றியும் அதை அவர் என்ன விலைக்கு விற்க உத்தேசிக்கிருர் என்பதைப்பற்றியும் வாரப் பயிர்ச்செய்கையாளருக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்று, அத்தகைய நெற்காணி எக்கமநலச் சேவைகள் குழுவின் அதிகார இடப்பரப்புக்குள் அமைந்திருக்கின்றதோ அக்கமநலச் சேவைகள் குழுவுக்குப் பதிவுத் தபால்மூலம் நிலக்கிழாரினுல் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(2) நிலக்கிழாரினுல் குறிப்பிடப்பட்ட விலைக்கு அத்தகைய நெற்காணியைக் கொள்வனவு செய்ய வாரப் பயிர்ச் செய்கையாளர் விரும்பினுல், அவர், தமது விருப்பார்வம் பற்றிக் கமநலச் சேவைகள் குழுவுக்குத் தெரிவித்தல் வேண்டும் என்பதுடன், கமநலச் சேவைகள் குழுவானது எக்காலப்பகுதியினுள் உரித்துமாற்றல் பூர்த்தியாக்கப்படல் வேண்டுமென்பதை நிர்ணயித்தலும் வேண்டும்.

(3) அத்தகைய நெற்காணியைக் கொள்வனவு செய்ய வாரப் பயிர்ச்செய்கையாளர் விரும்பி, ஆனால் நிலக்கிழாரினால் குறிக்கப்பட்ட விலை மிகையானதெனக் கூறினால், நிலக்கிழாருடனான கலந்தாலோசனையுடன் கமநலச் சேவைகள் ஆணைக்குழுவானது, அதன் அபிப்பிராயத்தில், நியாயமான விலையொன்றைத் தீர்மானிக்கலாம் என்பதுடன், உரித்துமாற்றல் எக்காலப்பகுதியொன்றுக்குள் பூர்த்தியாக்கப்படல் வேண்டுமென்பதையும் நிர்ணயிக்கலாம்.

(4) வாரப்பயிர்ச் செய்கையாளர் அத்தகைய நெற்காணியைக் கொள்வனவுசெய்ய விருப்பமில்லாதிருக்கின்றவிடத்து, அல்லது கமநலச் சேவைகள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட விலைக்குக் கொள்வனவுசெய்ய விருப்பமில்லாதிருக்கின்றவிடத்து, அல்லது விடயத்துக்கேற்றவாறு, நிலக்கிழாரினால் குறிக்கப்பட்ட விலைக்கு அல்லது கமநல சேவைகள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட விலைக்கு அத்தகைய காணியைக் கொள்வனவு செய்ய உடன்பட்டுவிட்டு, அதற்கென நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் உரித்துமாற்றலைப் பூர்த்தியாக்காதிருக்கின்றவிடத்து, கமநலச் சேவைகள் குழுவானது, அப்பயன்படச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன், அதன்மேல், நிலக்கிழாரானவர் அத்தகைய காணியை வேறு எவரேனும் ஆளுக்கு விற்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் சொந்தக்காரரால் செய்யப்படும், காணியொன்றின் உரித்துமாற்றம் எதுவும் வெற்றும்வெறிதுமாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய காணியை இருப்பாட்சி செய்கின்ற ஆள், 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வெளியேற்றப்படுதலுக்கு ஆளாதலும் வேண்டும். அத்துடன், அத்தகைய வெளியேற்றலில், 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அதனகத்துள்ள "பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வழியுரிமையாளர் அல்லது" என்னும் சொற்களை விட்டுவிட்டுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு அப்பிரிவிலுள்ள "பயிர்செய்ய இயலாதவராக இருக்கிறார்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதனகத்துக் குறித்துரைக்கப்பட்ட காரணங்களுக்காகப் பயிர் செய்ய இயலாதவராக இருக்கிறார்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 16அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

12. பதினாறும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"வாரப் பயிர்ச் செய்கையாளரால் பயிர்ச் செய்கையில் வேண்டுமென்றே காட்டப்படும் அசட்டையீனம்.

16அ. (1) அதே நெற்பயிர்ச்செய்கைப் போகத்தின் போது பயிர்ச்செய்கையானது சாத்தியமானதாகுமோ, அந்த நெற்பயிர்ச்செய்கைப் போகத்தின்போது அத்தகைய காணியிலான பயிர்ச்செய்கையை வாரப்பயிர்ச் செய்கையாளர் வேண்டுமென்றே அசட்டைசெய்துள்ளார் என, ஏதேனும் நெற்காணிப்பரப்பின் நிலக்கிழார் அக்காணியின் வாரப்பயிர்ச்செய்கையாளருக்கு அறிவித்தலின் பிரதியொன்றை அனுப்புவதுடன் ஆணையாளரானவர், விசாரணை அலுவலரொருவரால் விசாரணையொன்றை நடாத்துவிக்கச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விசாரணையின்பின், வாரப் பயிர்ச்செய்கையாளர் அத்தகைய காணியில் பயிர்செய்வதனை வேண்டுமென்றே அசட்டைசெய்துள்ளார் என விசாரணை அலுவலர் தீர்மானித்தால் அத்தகைய வாரப்பயிர்ச்செய்கையாளரானவர் 17 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறு நிலக்கிழாருக்கு அத்தகைய போகத்துக்கென அத்தகைய இடப்பரப்புக்கு வாடகை செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) நெற்காணிப் பரப்பின் நிலக்கிழார் ஒருவர், பயிர்ச்செய்கை சாத்தியமாகவிருக்கின்றதான இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான அடுத்தடுத்த போகங்களில் அத்தகைய காணியில் பயிர்செய்வதனை, வாரப் பயிர்ச்செய்கையாளர் வேண்டுமென்றே அசட்டைசெய்துள்ளார் என்பதை வாரப்பயிர்ச்செய்கையாளருக்கு அறிவித்தலின் பிரதியொன்று அனுப்புவதுடன், ஆணையாளருக்கு எழுத்தில் அறிவிக்கின்றவிடத்து, ஆணையாளரானவர் விசாரணை அலுவலரொருவரால் விசாரணையொன்றை நடாத்துவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விசாரணைக்குப் பின்னர் வாரப்பயிர்ச் செய்கையாளர் அத்தகைய காணியில் இரண்டு அல்லது மூன்று அடுத்தடுத்த போகங்களில் பயிர்செய்வதை அவ்வாறு அசட்டைசெய்துள்ளார் என விசாரணை அலுவலர் தீர்மானித்தால் ஆணையாளர் அத்தகைய வாரப்பயிர்ச்செய்கையாளரை அக்காணியைவிட்டு வெளியேறும்படி கட்டளையிடல் வேண்டும் என்பதுடன், வாரப்பயிர்ச்செய்கையாளர் அக்கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, 6 ஆம் பிரிவுக்கமைய அவர் அத்தகைய காணியிலிருந்து வெளியேற்றப்படுதலும் வேண்டும். அத்தகைய வெளியேறுகைக்கு அல்லது வெளியேற்றுகை இருப்பின் 4 ஆம் பிரிவின் (5அ) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) நெற்காணிப்பரப்பொன்றின் நிலக்கிழார் ஒருவர், வாரப்பயிர்ச்செய்கையாளரானவர், மாவட்டத்தில் உள்ள ஒப்பிடக்கூடிய காணிகளுக்கான சராசரி விளைச்சலிலும்பார்க்க குறைவான விளைச்சலைத்தரும் விதமாக அத்தகைய காணியில் பயிர்செய்வதை அசட்டைசெய்துள்ளாரென, வாரப்பயிர்ச்செய்கையாளருக்கு அறிவித்தலின் பிரதியொன்றை அனுப்புவதுடன், ஆணையாளருக்கு எழுத்தில் அறிவிக்கின்றவிடத்து, ஆணையாளரானவர், விசாரணை அலுவலரொருவரால் விசாரணையொன்றை நடாத்துவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விசாரணைக்குப்பின், வாரப்பயிர்ச்செய்கையாளரானவர், அவ்வாறு அக்காணியைப் பயிரிடுவதில் அசட்டைசெய்துள்ளார் என விசாரணை அலுவலர் தீர்மானித்தால், ஆணையாளரானவர் அத்தகைய காணியைவிட்டு வெளியேறும்படி அத்தகைய வாரப்பயிர்ச்செய்கையாளருக்குக் கட்டளையிடுதல் வேண்டும் என்பதுடன், வாரப்பயிர்ச்செய்கையாளர் அக்கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறினால், அவர் 6 ஆம் பிரிவுக்கிணங்க அக்காணியிலிருந்து வெளியேற்றப்படுதல் வேண்டும். அத்தகைய வெளியேற்றுகைக்குப்பின்னர் 4 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஆலயமொன்றுக்கு, கோவிலொன்றுக்கு, திருச்சபையொன்றுக்கு, தலதாமாளிகைக்கு, தேவாலயமொன்றுக்கும், ஆலயங்களுக்கும் அல்லது பள்ளிவாசலொன்றுக்குச் சொந்தமான ஒரு நெற்காணிப்பரப்பின் வாரப்பயிர்ச்செய்கையாளர் அத்தகைய ஆலயத்தின், கோவிலின், திருச்சபையின், தலதாமாளிகையின், தேவாலயங்களினதும், ஆலயங்களினதும் அல்லது பள்ளிவாசலின் நலனுக்கென அவர் புரிதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய சேவைகளைப் புரிவதற்குத் தவறிவிட்டாரென அல்லது அக்காணியைப் பயன்படுத்தியதற்கு மாறாக, அத்தகைய சேவைகளுக்குப் பதிலாக ஆணையாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியாயமான தொகையை அத்தகைய ஆலயத்துக்கு, கோவிலுக்கு, திருச்சபைக்கு, தலதாமாளிகைக்கு, தேவாலயங்களுக்கும் ஆயலங்களுக்கும் அல்லது பள்ளிவாசலுக்குச் செலுத்தத் தவறிவிட்டாரென ஒரு விகாராதிபதி அல்லது ஓர் ஆலயத்தின், கோவிலின் அல்லது திருச்சபையின் பிரதம குரு அல்லது தலதா மாளிகையின் நியவதன நிலமை அல்லது தேவாலயங்களினதும் ஆலயங்களினதும் பசநாயக நிலமைகளும் நம்பிக்கைப் பொறுப்பாளர், வாரப் பயிர்ச்செய்கையாளருக்கு அவ்வறிவித்தலின் ஒரு பிரதியை எழுத்துமூலம் ஆணையா

ளருக்கு அறிவிக்குமிடத்து, ஆணையாளரானவர், விசாரணை அலுவலர் ஒருவரால் விசாரணையொன்றை நடாத்துவித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விசாரணையின்பின்னர் அத்தகைய சேவைகளைப் புரிவதற்கு அல்லது வாரப்பயிர்ச்செய்கையாளர் தவறிவிட்டாரென விசாரணை அலுவலர் தீர்மானித்தால் வேறேதேனும் சட்டத்திலுள்ளது, எது எவ்வாறிருப்பினும் அத்தகைய வாரப்பயிர்ச்செய்கையாளரை அத்தகைய காணிப்பரப்பிலிருந்து வெளியேறுமாறு ஆணையாளர் கட்டளையிடல் வேண்டுமென்பதுடன், அக்கட்டளைக்கு இணங்கியொழுக, வாரப்பயிர்ச்செய்கையாளர் தவறினால் சட்டத்திலுள்ளது, எது எவ்வாறிருப்பினும், அவர் 6 ஆம் பிரிவுக்கிணங்க அக்காணிப்பரப்பிலிருந்து வெளியேற்றப்படுதல் வேண்டும். 4 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய வெளியேறுதல் அல்லது வெளியேற்றுகைக்குப் பின்னர் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) ஓராம் உட்பிரிவின்கீழான தீர்மானம் ஒன்று அத்தகைய தீர்மானம் எப்பிரதேசத்திற்கு ஏற்புடையதாக இருக்குமோ அப்பிரதேசத்திலுள்ள ஏதேனும் நெற்காணிப்பரப்புத் தொடர்பில் ஒவ்வொரு நெற்செய்கைப் போகத்திற்கும் அப்பரப்பிலிருந்து கிடைக்கும் மொத்த நெல்விளைச்சலின் நாலிலொரு பங்கை விஞ்சாத ஒரு பாகத்திலிருந்து, இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் விதிப்புத் தொகையைக் கழித்துவரும் தொகையை அப்பரப்பிற்குக் கொடுபடக்கூடியதான வாடகையாகக் குறித்துரைத்தல் வேண்டும்.".

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, அப்பிரிவின் ஓராம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) ஒரு நெற்காணிப் பரப்புத் தொடர்பாக வாரப் பயிர்ச்செய்கையாளரிடமிருந்து வாடகை நிலுவையாயுள்ளதென நிலக்கிழாரானவர் ஆணையாளருக்கு அறிவிக்கின்றவிடத்து, ஆணையாளரானவர், விசாரணை அலுவலர் ஒருவரால் விசாரணையொன்றை நடாத்துவித்தல் வேண்டுமென்பதுடன், வாடகை நிலுவையாயுள்ளது என விசாரணை அலுவலர் தீர்மானிப்பதுடன் அவரது தீர்மானத்தினை ஆணையாளருக்கு அறிவிக்குமிடத்து, ஆணையாளரானவர், அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலத்தினுள் அத்தகைய நிலுவையை அவர் செலுத்தத் தவறினால், அத்தகைய காணி தொடர்பாக அவரது வாரப் பயிர்ச்செய்கை முடிவுறுத்தப்படுமென வாரப்பயிர்ச்செய்கையாளருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத் தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, அப்பிரிவில் "முப்பதாம்" என்ற சொல் வருகின்ற இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக "பதினைந்தாம்" என்ற சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் ஓராம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) ஏதேனும் நெற் காணிப்பரப்பின் வாரப்பயிர்ச்செய்கையாளரிடமிருந்து வாடகையாக அல்லது அத்தகைய வாடகையின் மீதான வட்டியாக அல்லது அவை இரண்டுமாக, அவரது நிலக்கிழாருக்கு ஏதேனும் தொகையானது நிலுவையாக இருக்குமிடத்து, இப்பிரிவின், கீழான ஒரு கட்டளைக்கான எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை நிலக்கிழார் செய்யலாம் என்பதுடன், ஆணையாளரானவர், அத்தகைய விண்ணப்பம் தொடர்பாக விசாரணை, அலுவலரொருவரால் விசாரணையொன்றை வழிநடாத்துவித்தல் வேண்டுமென்பதுடன், வாரப்பயிர்ச்செய்கையாளரிடமிருந்து நிலக்கிழாருக்கு அத்தகைய எவையேனும் தொகை நிலுவையாக உள்ளதென விசாரணை அலுவலர் தீர்மானித்தால், ஆணையாளர், கட்டளையில் குறிக்கப்படற்பாலதான அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதிக்குள்ளும் அத்தகைய தொகையை நெல்லாகவோ அல்லது பணமாகவோ அல்லது நெல்லாகவும் அத்துடன் பணமாகவும் கொடுக்குமாறு கட்டளையிடுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவில் "அத்தகைய வாரப்பயிர்ச் செய்கையாளர் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையினால் அனுமதிக்கப்பட்டவாறான காலத்துக்குள்ளாக அத்தகைய தொகையைச் செலுத்தத் தவறினால்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வாரப்பயிர்ச்செய்கையாளர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறினால்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அதன் ஓராம் உட்பிரிவில் "சொந்தக்காரனது உரிமையையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "சொந்தக்காரரது அல்லது இருப்பாட்சியாளரது உரிமையையும்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் இரண்டாம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(3) முற்கூறிய உடைமையகற்றற் கட்டளையால் இன்னலுற்ற ஆளெவரும், எக்கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அக்கட்டளைத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அக்கட்டளைக்கெதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு

மேன் முறையீடு செய்யலாம். அத்தகைய மேன்முறையீட்டின் மேல் செயலாளரானவர் அத்தகைய கட்டளையை உறுதிப்படுத்தலாம் அல்லது நீக்கலாம் என்பதுடன், அவர் தனது தீர்மானத்தை ஆணையாளருக்கும் அத்துடன் மேன்முறையீட்டாளருக்கும் அறிவித்தலும் வேண்டும். செயலாளருடைய தீர்மானம் இறுதியானதும் முடிவானதுமாயிருத்தல் வேண்டுமென்பதுடன், அது எந்தவொரு நீதிமன்றத்திலோ அல்லது நியாய சபையிலோ கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, அப்பிரிவின் ஓராம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அ) உடைமையகற்றற் கட்டளைக்கெதிராக மேன்முறையீடெதுவும் செய்யப்படாவிட்டால் அக்கட்டளைத் தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்த பின், அல்லது ஒரு உடைமையகற்றற் கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்தது அத்தகைய கட்டளையானது உறுதிசெய்யப்பட்டதன் மேல், எந்த ஆளிடம் கட்டளை சேர்ப்பிக்கப்பட்டதோ அந்த ஆள் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள காணியை விட்டு வெளியேற வேண்டுமென்பதுடன், அத்தகைய காணி எந்தக் கமநலச் சேவைகள் குழுவின் அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்தக் குழுவுக்கு அத்தகைய காணியின் உடைமையை ஒப்படைத்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவில் "எந்த ஆளிடம்" என்ற சொற்களுக்குப் பதிலாக "38 ஆம் பிரிவின் ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எந்த ஆளிடம்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

38அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

20. முப்பத்தெட்டாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 38அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

"பிணக்கிலுள்ள காணிகளின் பயிர்ச்செய்கை.

38அ. (1) அத்தகைய காணி தொடர்பிலான எவையேனும் பிணக்கு நிலவுகின்ற காரணத்தால் ஏதேனும் கமத்தொழிற் காணியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாமல் இருக்கின்றது என ஆணையாளர் திருப்திப்படுமிடத்து, ஆணையாளரானவர், அத்தகைய கமத்தொழிற் காணியின் சொந்தப் பயிர்ச்செய்கையாளருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு பிரதிநிதித்துவம் செய்வதற்கு சந்தர்ப்பமொன்றை அளித்தபின்னர், கட்டளையொன்றின் மூலம், எந்த ஆள் மீது கட்டளை சேர்ப்பிக்கப்பட்டதோ அந்த ஆளைக் கட்டளையில் குறிப்பிடப்பட்ட காணியை விட்டு வெளியேறுமாறும் அத்துடன், அத்தகைய காணியின் உடைமையை ஆணையாளரிடம் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதியிடம் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் கையளிக்குமாறும் தேவைப்படுத்தலாம்.

(2) இப்பிரிவின் கீழ் கட்டளை சேர்ப்பிப்பதற்கு 35 ஆம் பிரிவின் இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் கட்டளை சேர்ப்பிக்கப்பட்டுள்ளவரான எவரேனும் ஆள் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் காணியைவிட்டு வெளியேறத் தவறினால் ஆறும் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஆணையாளர் அத்தகைய ஆளை வெளியேற்றுதல் வேண்டும்.

(4) அத்தகைய காணி தொடர்பிலான பிணக்குத் தீர்க்கப்படும் வரையில் அல்லது தீர்மானிக்கப்படும் வரையில் அத்தகைய காணி, ஆணையாளரால் வழங்கப்படக்கூடியவாறான எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கத்தோதான கமநலச் சேவைகள் குழுவால் அல்லது வேறு எவரேனும் ஆளால் பயிர்ச்செய்கை செய்யப்படுவதற்கு ஆணையாளர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் காணியானது பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படும் காலத்தின்போது அத்தகைய காணியிலிருந்து கிடைக்கும் வருமானமானது கமத்தொழில் விளைவுகளை அதிகரிக்கச் செய்வதற்கான தேவையைக் கவனத்திற்கொண்டு ஆணையாளரால் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் உபயோகிக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவில் "உதவி ஆணையாளர்களும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "உதவி ஆணையாளர்களும், கமநலச் சேவைகள் பகுதி அலுவலர்களும் அத்துடன்," என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவில் ஐந்தாம் உட்பிரிவில் "ஒவ்வொரு பிரதி ஆணையாளரும், ஒவ்வோர் உதவி ஆணையாளரும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஒவ்வொரு பிரதி ஆணையாளரும் ஒவ்வோர் உதவி ஆணையாளரும் அத்துடன் ஒவ்வொரு கமநல சேவைகள் பகுதி அலுவலரும்" என்ற சொற்களையிடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 41அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.*

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 41அ எனப் பயனுடையதாதலும் வேண்டும் :—

"ஆணையாளர் தகவல்களைக் கோரலாம் என்பது.

41அ. அவர் வைத்திருக்கும் கமத்தொழிற் காணியின் விஸ்தீரணம், அத்தகைய கமத்தொழிற் காணியில் அவரால் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கையின் தன்மை அத்துடன், இச்சட்டத்தின் முறையான செயற்படுத்துகைக்கான அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடக் கூடியவாறான ஏனைய கருமங்கள்போன்ற விபரங்களை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தேதியன்று அல்லது அதற்கு முன்னதாகக்

கொடுத்துதவுமாறு ஏதேனும் கமத்தொழிற் காணியின் எவரேனும் சொந்தக் காணிப்பயிர்ச்செய்கையாளரை அல்லது இருப்பாட்சியாளரை அல்லது அத்தகைய கமத்தொழிற் காணியில் ஏதேனும் அக்கறையுடைய எவரேனும் ஆளை எழுத்திலான ஓர் அறிவித்தல் மூலமாக ஆணையாளர் தேவைப்படுத்தலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் ஓராம் உட்பிரிவில்—

(i) பந்தி (அ) வுக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(அ) நெற் பயிர்ச்செய்கையின் ஊக்குவிப்பு, நீடிப்பு, ஒழுங்குபடுத்தல் அல்லது முகாமைத்துவம் அல்லது வேறேதேனும் வடிவத்திலான பயிர்ச்செய்கை;"

(ii) பந்தி (ஊ) வுக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஊ) கமத்தொழிற் காணியின் திறமையான பயன்பாட்டிற்கும், விளைவுப் பெருக்கத்தின் சீர்திருத்தத்திற்கும், நீர்ப்பாசன வேலைகளின் பாதுகாப்பிற்கும் அத்துடன் அதனகத்திலிருந்து விநியோகிக்கப்படும் நீரைப் பேணுவதற்கும் என அத்தகைய காணியின் சொந்தக் காணிப்பயிர்ச்செய்கையாளர்கள் மீதும், இருப்பாட்சியாளர்கள் மீதும் சுமத்தப்பட்ட வேறு எவையேனும் கூட்டுப் பொறுப்புக்கள்";

(ஆ) அப்பிரிவின் ஐந்தாம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்;

"(5) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் கூட்டப்படும் கூட்டம் ஒன்று, அக்கூட்டத்தில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கமத்தொழிற் காணியின் சொந்தக்காணிப்பயிர்ச்செய்கையாளர்களின் அல்லது இருப்பாட்சியாளர்களின் மொத்த எண்ணிக்கையினருள் நான்கிலொரு பகுதியினரை அல்லது இருபத்தைந்துபேரைப் பிரதிநிதித்துவப்படுத்தும்படி சொந்தக்காணிப் பயிர்ச்செய்கையாளர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் சமூகமளித்திருந்தாலன்றி வலிதானதாக அமைக்கப்பட்டதாகக் கருதப்படுதல் ஆகாது. அத்தகைய கூட்ட நடப்பெண் அடுத்தடுத்துவரும் இரண்டு கூட்டங்களில் இல்லாமலிருந்தால் தலைமைதாங்கும் அலுவலர் இரண்டாவது கூட்டத்தை ஒத்திவைக்கவேண்டுமென்பதுடன், மூன்றாவது கூட்டத்திற்கு ஒரு தேதியையும் நிர்ணயித்தலும் வேண்டும். அத்தகைய மூன்றாவது கூட்டமானது கூட்ட நடப்பெண் இல்லாமையைக் கவனத்திற்கொள்ளாது எல்லா நோக்கங்களுக்கும் வலிதானதாக அமைக்கப்பட்ட கூட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(இ) அப்பிரிவின் பத்தாம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(10) (அ) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் கமத்தொழில் காணியின் சொந்தக்காணிப்பயிர்ச் செய்கையாளர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் குறித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் தங்களுக் கிடையே இருந்து (இதனகத்துப்பின்னர் "யாயப் பிரதிநிதி" எனக் குறிப்பிடுசெய்யப்படுபவரான) ஒரு ஆளை, குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய கடமைகளைப் புரிவதற்கும், நீர்ப்பாசன வேலைகளைப் பாதுகாப்பது அத்துடன் அதனகத்தி லிருந்து விநியோகிக்கப்படும் நீரைப் பேணுவது தொடர்பிலான கருமங்களிலும் அத்துடன் காலத்துக்குக்காலம் பயிர்ச்செய்கை தொடர்பில் எழக்கூடிய எவையேனும் பிற கருமங்களிலும் பயிர்ச்செய்கை அலுவலருக்கு உதவுவதற்கும் எனத் தெரிவு செய்யலாம் :

ஒரு யாயப் பிரதிநிதி,

(1) ஆணையாளருக்கு முகவரியிடப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் முன்னதாகவே பதவி விலகினாலொழிய; அல்லது

(ii) ஆணையாளரால் முன்னதாகவே பதவியிலிருந்து அகற்றப் பட்டாலொழிய,

அவர் தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று ஆண் டுகள் கொண்டவொரு காலப்பகுதிக்கு அப்பதவியில் சேவை செய்யலாம்.

ஆணையாளரானவர், எவரேனும் யாயப் பிரதிநிதி கடமைகளை அசட்டை செய்தல் அல்லது பிறழ்நடத்தை உள்ளவராயிருந் தால் அல்லது இப்பிரிவினால் அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் கடமையைப் புரியத் தவறியிருந்தால், ஆணையாளரால் அல்லது ஆணையாளரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு அலுவலரால் நடாத்தப்பட்ட முறையான விசாரணையின் பின்னர், அத்தகைய யாயப் பிரதிநிதியைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) கமத்தொழிற் காணியின் ஒவ்வொரு சொந்தக்காணிப் பயிர்ச் செய்கையாளரும் அத்துடன் இருப்பாட்சியாளரும், யாயப் பிரதிநிதியினுடைய ஊதியம் எனக் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தொகையை யாயப் பிரதிநிதிக்கு செலுத்து தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தொகையைச் செலுத் தத்தவறும் ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

(ஈ) இச்சட்டத்தின்கீழ் யாயப் பிரதிநிதியின் ஊதியத்தை அறவிடுவ தில் 47ம் பிரிவின் (2)ம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங் களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(உ) பதினோராம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின் வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(ii) யாயப் பிரதிநிதியானவர், ஆணையாளரினது கட்டுப்பாட்டுக்கும் பணிப்புக்கும் அமைய, நீர்ப்பாசன, பயிர்ச் செய்கை நடைமுறைகள் சம்பந்தமாகவும், சிறிய நீர்ப்பாசன வேலைகளைப் பாதுகாத்தல் அதிலிருந்து வழங்கப்படும் நீரைப் பேணுதல் தொடர்பிலும் அத்தகைய கமத் தொழிற் காணியின் சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு இருக்கும் கூட்டுப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக, யாயப் பிரதிநிதி அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும்படி கமத்தொழிற் காணியின் எவரேனும் சொந்தக்காரரை அல்லது இருப்பாட்சியாளரைப் பணிப்பதற்குத் தத்துவமுடையவராகவிருத்தல் வேண்டும்.".

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IV இனை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகமானது உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IVஅ எனப் பயனுடையதாதலும் வேண்டும். முதன்மைச் சட்டவாக்கத்தில் IVஅ என்னும் பாகத்தை உட்புகுத்தல்.

"பாகம் IVஅ

*விசாரணை அலுவலர்களினது நியமனமும் தத்துவங்களும் கடமைகளும் அத்துடன் மீளாய்வுச்சபையும்*

*விசாரணை அலுவலர்கள் போன்றோர்.*

42அ. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான விசாரணை அலுவலர்கள் நியமிக்கப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால், விசாரணை அலுவலர் ஒருவரைக்கொண்டு விசாரணை ஒன்று நடாத்துவிக்க வேண்டுமென ஆணையாளர் தேவைப்படுத்தப்பட்டிருக்குமிடத்து, ஆணையாளரானவர் அத்தகைய விடயத்தை விசாரணை அலுவலர் ஒருவருக்கு ஆற்றுப்படுத்தல்வேண்டும். அந்த ஆற்றுப்படுத்துகையுடன் ஆணையாளரினால் தயாரிக்கப்பட்ட அவரது அறிவுக்கு எட்டியவரையில் முடிவுசெய்யப்படவேண்டியதான கேள்விகளை எடுத்துக்காட்டும் கூற்றொன்றும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) விசாரணை அலுவலர் அத்தகைய எல்லா விசாரணைகளையும் செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விடயத்தைத் தீர்மானிப்பதற்கு அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய சான்றுகள் யாவற்றையும் பெறுதலும் வேண்டும். அவர் தனது தீர்மானத்தை ஆணையாளருக்கும் சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கும் எழுத்தில் அறிவித்தல்வேண்டும்.

(4) விசாரணையொன்று நடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாமென்பதுடன் அத்தகைய ஏதே

னும் ஒழுங்குவிதிக்கமைய விசாரணை அலுவலர் ஒருவர் விசாரணையை நடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(5) விசாரணை அலுவலரானவர், 65 ஆம் பிரிவில் ஆணையாளருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல்வேண்டும்.

(6) விசாரணை அலுவலர் ஒருவரினால் அழைப்பாணை ஒன்று வழக்கப்பட்டுள்ளவரான எவரேனும் ஆள்—

(அ) நியாயமான காரணமின்றி அழைப்பாணையில் கூறப்பட்டுள்ள நேரத்திலும் இடத்திலும் அத்தகைய விசாரணை அலுவலர் முன்பு சமுகமளிக்கத் தவறினால்; அல்லது

(ஆ) நியாயமான காரணமின்றி சத்தியம்செய்ய மறுத்தால் அல்லது முறையாகச் சத்தியஞ் செய்திருந்து நியாயமான காரணமின்றி அத்தகைய விசாரணை அலுவலரினால், அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் வினாவுக்கு விடையளிக்க மறுத்தால் அல்லது தவறினால் அல்லது அத்தகைய ஏதேனும் வினாவுக்கு வேண்டுமென்றே பிழையானதொரு விடையையளித்தால்; அல்லது

(இ) நியாயமான காரணமின்றி அத்தகைய அலுவலரின் முன், அவரது உடைமையிலுள்ளதும், காண்பிக்குமாறு அவரைத் தேவைப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கமறுத்தால் அல்லது தவறினால்,

அத்தகைய ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

மீளாய்வுச் சபை.

42ஆ (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஒவ்வொரு மாகாணம் தொடர்பாகவும் பன்னிரண்டு ஆட்களுக்கு குறையாத எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்ட குழாம் ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அக்குழாத்திலிருந்து அத்தகைய மாகாணத்தினுள் இச்சட்டத்தினால் மீளாய்வுச் சபையொன்றின்மீது சுமத்தப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக மீளாய்வுச் சபைகள் அமைக்கப்படுதலும் வேண்டும்.

(2) குழாத்தினது உறுப்பினர் ஒருவர் இறப்பு, பதவி துறத்தல், பதவியிலிருந்து அகற்றப்படுதல், இலங்கையில் இல்லாமைபோன்ற காரணங்களுக்காகவும் அல்லது சுகவீனம் காரணமாகப் பதவியை வறிதாக்கு

மிடத்து, அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு பதிலாக அல்லது அத்தகைய உறுப்பினருக்காகச் செயலாற்றுவதற்கு என இன்னுமொரு ஆள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) குழாம் ஒன்றிற்கு நியமிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும், அவர் முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டுகளுக்குப் பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின்—

(அ) இறந்த, பதவி துறந்த அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட ஆளொருவரின் இடத்திற்கு நியமிக்கப்பட்ட ஆளொருவர், கடைசியாகக் குறிப்பிடப்பட்ட ஆளினது பதவிக் காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கே பதவி வகித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இலங்கையில் இல்லாதிருக்கின்ற அல்லது சுகவீனமாயுள்ள ஆளுக்காகச் செயலாற்றுவென நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர், கடைசியாகக் குறிப்பிடப்பட்ட ஆள் இலங்கையில் இல்லாதிருக்கும் காலப்பகுதிக்கு அல்லது சுகவீனமாகவிருக்கும் காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

(4) காலங்கழிவதன் மூலம் பதவியை வறிதாக்கும் ஆளொருவர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(5) குழாத்தினது உறுப்பினர், ஒருவர், குழாத்தினது தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(6) மீளாய்வுச் சபையை அமைக்கும் நோக்கத்துக்காக, குழாத்தினது தவிசாளரானவர், குழாத்திலிருந்து மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட ஆட்களைத் தெரிவு செய்தல் வேண்டும். தவிசாளரானவர், மீளாய்வுச் சபையினை அமைக்கும் உறுப்பினர்களுள் ஒருவராகத் தம்மைத் தேர்ந்தெடுக்கலாம்.

(7) குழாமொன்றினது தவிசாளர் இப்பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட ஒரு மீளாய்வுச் சபையினது உறுப்பினரொருவராக இருக்கின்றவிடத்து அவர் அல்லது அவர் சபையினது உறுப்பினரொருவராக இல்லாதிருக்குமிடத்து, அத்தகைய தவிசாளரினால் பெயர் குறித்து நியமனம் செய்யப்படக்கூடியவரான சபையினது அத்தகைய உறுப்பினர் சபையின் தலைவராகவிருத்தல் வேண்டும்.

(8) மீளாய்வுச் சபை ஒவ்வொன்றிற்கும் செயலாளரொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(9) மீளாய்வுச் சபையின் செயலாளர் சபையினால் விசாரிக்கப்படும் ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பாகவும், அந்த மேன்முறையீடு தொடர்பாக சபையின் முன்வைக்கப்படும் அத்தகைய எல்லா வழக்கு நடவடிக்கைகளினதும் பதிவேடொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(10) மீளாய்வுச் சபையானது, அவ்வாறு செய்வது பொருத்தமானதென அது கருதினால் எவரேனும் சாட்சியைச் சத்தியத்தின்மீது விசாரணை செய்யலாமென்பதுடன், சபையின் முன் தோன்றுமாறு அல்லது சபையினது அபிப்பிராயத்தில் இயைபானதாக விருக்கின்ற எவையேனும் ஆவணங்களைச் சபைக்கு முன்வைக்குமாறு எவரேனும் ஆளைக் கட்டளையிட்டும் அழைக்கலாம்.

(11) மீளாய்வுச் சபையொன்றினது தவிசாளரின் அல்லது செயலாளரின் கைப்பட வழங்கப்பட்ட ஆவணங்கள், அறிவித்தல்கள் அல்லது அழைப்பாணைகள் என்பன அந்த மீளாய்வுச் சபையினால் வழங்கப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(12) மீளாய்வுச் சபையொன்றினால் அழைப்பாணை வழங்கப்பட்டவரான அல்லது வழங்கப்பட்டவராகக் கருதப்படும் ஆள் எவரும்—

(அ) நியாயமான காரணமின்றி அழைப்பாணையில் கூறப்பட்டுள்ள நேரத்திலும் இடத்திலும் மீளாய்வுச் சபையின் முன்பு சமுகமளிக்கத் தவறினால்; அல்லது

(ஆ) நியாயமான காரணமின்றி சத்தியஞ் செய்ய மறுத்தால் அல்லது முறையாகச் சத்தியஞ் செய்திருந்து நியாயமான காரணமின்றி அத்தகைய சபையினால் விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயங்களில் மீளாய்வுச் சபையின் உறுப்பினரொருவரினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் வினாவுக்கு விடையளிக்க மறுத்தால் அல்லது தவறினால் அல்லது அத்தகைய ஏதேனும் வினாவுக்கு வேண்டுமென்றே ஒரு பிழையான விடையை யளித்தால்; அல்லது

(இ) நியாயமான காரணமின்றி அவரின் உடைமையில் அல்லது தத்துவத்திலுள்ளதும் காண்பிக்குமாறு அவர் தேவைப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் ஆவணத்தை மீளாய்வுச்சபையின் முன் காண்பிக்க மறுத்தால் அல்லது தவறினால்,

அவர் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(13) மீளாய்வுச் சபையொன்றின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(14) மீளாய்வுச் சபையொன்று இச்சட்டத்தின்கீழ் அத்தகைய சபைக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மீது, எம் முடிவுக்கெதிராக அல்லது எத்தீர்மானத்திற்கெதிராக அத்தகைய மேன்முறையீடு செய்யப்பட்டதோ, அத்தீர்மானத்தை அல்லது அம் முடிவை உறுதிப்படுத்தலாம் அல்லது வேறுபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய சபையினது முடிவானது இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும் என்பதோடு ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.".

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:—

"(3) (அ) கமநலச் சேவைகள் குழுவொன்றானது பின்வருமாறு ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(i) அத்தகைய குழுவின் அதிகார இடப்பரப்பினுள் அமைந்திருக்கும் கமத்தொழிற் காணியின் சொந்தக் காணிப் பயிர்ச் செய்கையாளர்களினதும் இருப்பாட்சியாளர்களினதும் எவ்வாறாயினும், குறைந்தது மூன்று ஆட்களாவது நெற் காணியின் இருப்பாட்சியாளர்களாகவும் அத்துடன் அத்தகைய வேறு மூன்று ஆட்கள் வாரப் பயிர்ச் செய்கையாளர்களாகவும் இருக்கும்படி தெரிவு செய்யப்பட்டவர்களான பத்து ஆட்களையும்;

(ii) பகிரங்க அலுவலர்களான அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அல்லது நியதிச் சட்டமுறைக் குழுக்களினது உத்தியோகத்தர்களான ஐந்து ஆட்களையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) குழுவானது, அது அவசியமெனக் கருதுகின்றபோது, எவரேனும் பகிரங்க அலுவலரை அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினது, அல்லது ஏதேனும் வேறு நிறுவனத்தினது, அலுவலரை குழுவுக்கு ஒத்துத் தேர்ந்தெடுக்கலாம் அல்லது அதன் ஏதேனும் கூட்டங்களில் சமூகமாயிருக்குமாறு எவரேனும் ஆளை அழைக்கலாம், இப்பந்தியின்கீழ் ஒத்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது அழைக்கப்பட்ட ஆள் எவரும், குழுவினது கூட்டம் எதனிலும் வாக்களிக்கத் தகுதியுடையவராதலாகாது."; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:

"(7) கமநலச் சேவைகள் குழுவொன்றின் உறுப்பினர் எவரும்—

(அ) மனத்தளர்வு காரணமாக அல்லது உடற்றளர்வு காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரியத் தகவற்றவராக அல்லது அத்தகைய கடமைகளைத் தொடர்ந்து புரிவதற்குப் பொருத்தமற்றவராக; அல்லது

(ஆ) நியாயமான காரணமின்றி குழுவின் மூன்று அடுத்துறும் கூட்டங்களுக்குச் சமூகமளிக்கத் தவறியவராக,

இருக்கின்றாரெனத் திருப்திப்பட்டால், ஆணையாளரானவர், அவ்வுறுப்பினரது நியமனத்தை முடிவுறுத்தலாம் என்பதுடன், அத்தகைய குழுவுக்கு இன்னொரு உறுப்பினரையும் நியமிக்கலாம்;

ஆயின், எவ்வாறாயினும், பதவியிலிருந்து அகற்றப்படுகின்ற அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்குகின்ற உறுப்பினர் ஒருவரின் இடத்திற்கு நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர், அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர் பதவியிலிருந்து முன்னரே அகற்றப்பட்டால் ஒழிய அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்கினால் ஒழிய, அவர் எந்த உறுப்பினரின் இடத்திற்கு நியமிக்கப்பட்டாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(2அ) (அ) கமத்தொழில் காணியினது இடாப்பானது—(i) அவ்வாறு செய்வது அவசியமானவிடத்தும், அத்துடன் அவசியமானபோதும் திருத்தப்படுதல் வேண்டும்;

(ii) 1991 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும் மூன்று ஆண்டுகளுக்கொருமுறை மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்;

(iii) ஒவ்வொரு ஆண்டிலும் சனவரி, யூன் ஆகிய மாதங்களில் பொதுமக்களின் பரிசீலனைக்காகத் திறந்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் நெற்காணிப் பரப்புத் தொடர்பாக ஒரு புதிய வாரப் பயிற் செய்கையாளரின் பெயரைச் சேர்த்ததன் மூலம் கமத்தொழிற் காணிகளின் இடாப்பினைத் திருத்துமாறு குழுவுக்குச் செய்யப்படும் விண்ணப்பம் எதுவும் எழுத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய காணிப் பரப்பின் வாரப் பயிர்ச் செய்கையாளராக விண்ணப்பகாரர் பதியப்படுவதற்குச் சம்மதம் தெரிவித்து நிலக்கிழாரிடமிருந்து பெற்ற கடிதமொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்."; அத்துடன்

(ஆ) நான்காம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும்:—

"(4) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இடாப்பைத் தயாரிப்பதிலும் அத்துடன் அதனை மீளாய்வு செய்வதிலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.".

27. பின்வரும் புதிய பிரிவுகள் 45ம் பிரிவின் இறுதியில் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 அ, 45ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் : முதன்மைச் சட்டவாக்கத்தின் 45அ, 45ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

"கமத்தொழிற் காணியின் அளவீடு

45அ. (1) கமநல சேவைகள் குழு ஒவ்வொன்றும் ஆணையாளரின் பணிப்புரைகளுக்கிணங்க அதன் அதிகார இடப்பரப்பிலுள்ள கமத்தொழிற் காணியின் அளவீடொன்றைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய காணி சம்பந்தப்பட்ட பதிவேடுகளைப் பேணுதலும் வேண்டும்.

(2) கமநலச்சேவைகள் குழுவானது கமத்தொழிற் காணியின் நிலக்காரர்களிடமிருந்து அல்லது இருப்பாட்சியாளர்களிடமிருந்து, அத்தகைய காணியின் அளவீடு செய்வதற்கும் அத்துடன் பதிவேடுகளைப் பேணுவதற்குமான விகிதாசார செலவை அறவிடலாம்.

வாரப் பயிர்ச் செய்கையாளர்களின் பதிவேடு.

45ஆ. கமநல சேவைகள் குழு ஒவ்வொன்றும் அத்தகைய குழுவின் அதிகார இடப்பரப்பிற்குட்பட்ட வாரப் பயிர்ச்செய்கையாளர்களின் பதிவேடொன்றை விதித்துரைக்கப்பட்ட முறையில் தயாரித்தலும் மீளாய்வு செய்தலும் அத்துடன் பேணுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(i) பந்தி (ஆ) என்பதனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

"(ஆ) கமத்தொழிற் காணியின் சொந்தக் காணிப் பயிர்ச் செய்கையாளர் மீது அல்லது இருப்பாட்சியாளர் மீது அத்தகைய காணியின் ஒரு ஏக்கருக்கு ஆறு ரூபாவை விஞ்சாத விகிதத்தில் வருடாந்த இடப்பரப்பு அறவீடொன்றையும், இச்சட்டத்தின்கீழ் ஆற்றப்படும் சேவைகளுக்காக அறவிடப்படும் வேறு ஏதேனும் விதிப்பனவையும், (2அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, விதிப்பதற்கும் அறவீடு செய்வதற்குமான தத்துவம்.".

(ii) பந்தி (ஈ) என்பதனை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:—

"(ஈ) ஆணையாளரினால் நிர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வங்கியில் கணக்கொன்றைப் பேணி வருவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான தத்துவம்.

(உ) அதன் பணத்திலிருந்து கமத்தொழில் நடவடிக்கைகளுக்காக, சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளர்களுக்கும் இருப்பாட்சியாளர்களுக்கும் கடன்களை வழங்குவதற்கும் அத்தகைய கடன்களை அறவீடு செய்வதற்குமான தத்துவம்;

(ஊ) நீர்ப்பாசன வேலைகளைப் பழுதுபார்த்தலும், பேணுதலும், அபிவிருத்தி செய்தலும், அவசியமான தாருமிடத்து, அவற்றைச் செய்வதற்கு அதன் பணத்தைப் பயன்படுத்துவதற்கான தத்துவம்;

(எ) கமத்தொழிலை அபிவிருத்தி செய்வதுடன் குழுவின் முகாமைத்துவத்தை முன்னேற்றும் கண்ணோட்டத்துடன் அலுவலர்களையும் கமக்காரர்களையும் பயிற்றுவிப்பதற்கென, ஆணையாளரின் வேண்டுதலின் பேரில் நிதி உதவியை வழங்குவதற்கான தத்துவம்,"; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(2அ) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியின் கீழ் விதிக்கப்படும் இடப்பரப்பு அறவீட்டின் கொடுப்பனவிலிருந்து பின்வருவன விலக்களிக்கப்படுதல் வேண்டும்:—

(i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனமும்;

(ii) வீட்டுத் தோட்டமொன்றின் சொந்தக் காணிப் பயிர்ச் செய்கையாளர் அல்லது இருப்பாட்சியாளர், இப்பிரிவின் நோக்கத்துக்காக, "வீட்டுத் தோட்டம்" என்பது, வீட்டுப் பாவனைக்காக மட்டுமென மரக்கறி வகைகளின் பழவகைகளின் அல்லது கால்நடைகளின் உற்பத்திக்காக சொந்தக்காரரினால் அல்லது இருப்பாட்சியாளரினால் முழுமையாகவோ அல்லது பிரதானமாகவோ செய்கை பண்ணப்படுவதான அல்லது பயன்படுத்தப்படுவதான அரை ஏக்கருக்கு மேற்படாத காணிப்பரப்பொன்றெனப் பொருள்படுதல் வேண்டும்.

(2ஆ) ஏதேனும் காணி அல்லது காணியில் உள்ள ஏதேனும் நலன், பொதுவான சூடடிக்கும் இடத்துக்கென ஏதேனும் கமநலச் சேவைகள் குழுவிற்குத் தேவைப்படுமிடத்து, அக்காணி அல்லது காணிகளிலுள்ள நலனனது, அத்தகைய குழுவுக்காக, காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் கொள்ளப்படலாம் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், அக்காணியின் அல்லது அந்த நலனின் கொள்ளல் நோக்கத்துக்காக ஏற்புடையத்தாதலும் வேண்டும்; அத்துடன்

(இ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துதல் மூலமும்:—

"(3அ) கமநலச் சேவைகள் குழுவொன்று எழுத்திலான அறிவித்தல் மூலம் அதன் அதிகார இடப்பரப்புக்குள் உள்ள ஏதேனும் கமத்தொழில் காணியின் சொந்தக் காணிப்

பயிர்ச்செய்கையாளரை அல்லது இருப்பாட்சியாளரை அல்லது அக்காணியில் ஏதேனும் நலனைக் கொண்டிருக்கின்ற வேறு எவரேனும் ஆளை, அவர் உடைமையில் வைத்துள்ள காணியின் பரப்பளவு, அவரால் கொண்டு நடத்தப்படும் பயிர்ச்செய்கையின் தன்மை அத்துடன் அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்படக் கூடியவாறானவையும் இச்சட்டத்தின் செயற்படுத்தலுக்கென தேவைப்படுபவையுமான அத்தகைய வேறு விடயங்கள் பற்றிய அத்தகைய விபரங்களை, அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் தேதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம்."; அத்துடன்

(ஈ) நாலாம் உட்பிரிவின் "ஆணையாளர்" என்ற சொல்லுக்குப் பதிலாக "நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சுச் செயலாளரின் ஒருப்பாட்டுடன் ஆணையாளர்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

46அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"கமநலச் சேவைகள் குழுக்களினது கணக்காய்வு.

46 அ (1) கமநலச் சேவைகள் குழுவொன்று, அரசியலமைப்பின் பொருளுக்குட்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்று என்றுற்போன்று, அத்தகைய குழுவினது கணக்குகளின் கணக்காய்வுக்கு, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை ஏற்புடையதாதல் வேண்டும் :

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதி, அவரது அபிப்பிராயத்தின்படி கணக்குகளில் முறைகேடானதாக அல்லது சட்டமுறையற்றதாக உள்ளதான ஒவ்வொரு விடயத்தையும் அனுமதித்தலாகாது ; அத்துடன் ஆணையாளர் அத்தகைய கொடுப்பனவினைச் செய்கின்ற அல்லது செயற்படுத்துகின்ற அத்தகைய குழுவின் அலுவலர் மீது அல்லது ஊழியர் மீது அதனையே மேலதிகக் கட்டணமாக விதித்தல் வேண்டுமென விதந்துரைத்தலும் வேண்டும்; அத்துடன் ஆணையாளர், எவரேனும் அலுவலரினால் அல்லது ஊழியரினால் கணக்கில் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டியதும், ஆனால் அவ்வாறு கொண்டுவரப்படாததுமான ஏதேனும் பணத்தொகையை அத்தகைய அலுவலர் மீது அல்லது ஊழியர் மீது பொறுப்பித்தல் வேண்டும் என்பதுடன், அதன்மேல் ஆணையாளரானவர், அத்தகைய ஆளிடமிருந்து வருமதியான தொகையை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

(3) அத்தகைய மேலதிகக் கட்டணம் அல்லது அனுமதி மறுப்பு எதனையும் உறுதிப்படுத்துவதற்கு முன்னர், ஆணையாளரானவர், உத்தேச மேலதிகக் கட்டணம் அல்லது அனுமதி மறுப்பு பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மேலதிகக் கட்டணத்துக்கு அல்லது அனுமதி மறுப்புக்கு எதிராகப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு அல்லது கேட்கப்படுவதற்கு, அத்தகைய ஆளுக்கு சந்தர்ப்பமளித்தலும் வேண்டும். அதன் மேல் ஆணையாளரானவர், அல்லது தீர்மானத்தை அதற்கான காரணங்களுடன் சேர்த்து அத்தகைய ஆளுக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) எவரேனுமாளுக்கு எதிராக ஆணையாளரினால் ஒரு மேலதிகக் கட்டணம் அல்லது அனுமதி மறுப்பு உறுதிப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய உறுதிப்படுத்தலானது, அதில் தரப்பட்ட விடயங்களுக்கான முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

(5) ஏதேனும் மேலதிகக் கட்டணத்தால் அல்லது அனுமதி மறுப்பினால் இன்னலுறும் ஆளெவரும், ஆணையாளரின் தீர்மானமானது அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்து முப்பது நாட்களுக்குள், மேன்முறையீட்டின் பிரதியொன்றை ஆணையாளருக்கு அனுப்புவதுடன், அத்தீர்மானத்திற்கு எதிராக, அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின் மீது, வழக்கின் குணநலன்களுக்கிணங்கப் பிரச்சினைக்குரிய விடயத்தைத் தீர்த்தல், அத்தகைய செயலாளருக்குச் சட்டமுறையானதாதலும் வேண்டும்.

(6) அமைச்சரின் அமைச்சுச் செயலாளரானவர், அதற்கான ஏதுக்கள் உள்ளனவென அவர் எண்ணுவாரெனின், மேலதிகக் கட்டணத்தொகை அல்லது அனுமதி மறுக்கப்பட்ட தொகை முழுவதையும் அல்லது அதன் பாகம் எதனையும், அத்தகைய மேன்முறையீடு செய்கின்ற ஆளிடமிருந்து அறவிடுவதற்குக் கட்டளை மூலம் பணிக்கலாம். அத்துடன் அம்மேலதிகக் கட்டணம் அல்லது அனுமதி மறுப்புத் தொகை சட்டமுறையாகக் கொடுக்கப்பட்டிருந்து, ஆனால் விடயத்தின் குறிப்பிட்ட சூழ்நிலையில் அம்மேலதிகக் கட்டணம் அல்லது அனுமதி மறுப்புப் தொகை திருப்பப்படுதல் நியாயமானதும் நேர்மையானதுமாகுமென அவர் கண்டால், அதனைத் திருப்பிச் செலுத்துதல் வேண்டுமென அவர் கட்டளை மூலம் பணிக்கலாம்; ஆனால் அத்தகைய மேலதிகக் கட்டணத்தினை அல்லது அனுமதி மறுப்புத் தொகையை நடைமுறைப்படுத்துவதில்,

ஆணையாளரின் உறப்பட்டிருக்கக் கூடியதுதான செலவுகள், செலவினங்களின் தொகை அல்லது செயலாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அச் செலவுத் தொகையின் அத்தகைய பாகம், அத்தகைய ஆளிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்.

(7) மேலதிகக் கட்டணம் அல்லது அனுமதி மறுப்பு பற்றிய சான்றிதழொன்று அல்லது ஏதேனும் மேன்முறையீட்டின் மீதான செயலாளரின் கட்டளை கிடைக்கப்பெற்றதன் மேல், ஆணையாளரானவர், பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னதாக (அத்தேதியானது ஆணையாளரின் தீர்மானத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குக் குறையாததொரு தேதியாகவிருத்தல் வேண்டும்) சான்றிதழில் தரப்பட்டுள்ள பணத்தொகையைச் செலுத்துமாறு அத்தகைய ஆளை தேவைப்படுத்துதல் வேண்டும்.

(8) ஆளெவரும், ஏழாம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுமிடத்து, ஆணையாளரானவர், அத்தகைய ஆளின் பெயர், கடைசியாக அறியப்பட்ட அவரது வதிவிடம்; வருமதியாகவுள்ளதான தொகை ஆகிய விபரங்களைக் கொண்டிருக்கும் சான்றிதழொன்றை அத்தகைய வதிவிடத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்திற்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நீதிமன்றமானது, அத்தகைய நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று அத்தகைய தொகையை அறவிடுதலும் வேண்டும்.

(9) ஏதேனும் அனுமதி மறுப்பினை அல்லது மேலதிகக் கட்டணத்தினை நடைமுறைப்படுத்துவதில் உறப்பட்ட செலவுகள் செலவினங்கள் என்றவாறு செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட பணத்தொகை ஒன்று நீங்கலாக, இப்பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொன்றும், கமநலச் சேவைகள் நிதியத்தில் வரவுவைக்கப்படல் வேண்டும்.".

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) கமநலச் சேவைகள் குழுவொன்று, எழுத்திலான அறிவித்தல்மூலம், இடப்பரப்பு அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாயிருப்பதனுலும் அதனைச்செலுத்த ஒவ்வொரு கமத்தொழிற் காணியின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அல்லது அத்தகைய குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குத் தவறுபவரான எவரேனுமாகளுக்கு, விடயத்திற்கேற்றுற்போன்று, அத்தகைய அறவீட்டை அல்லது அத்தகைய கடனை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியதான அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய குழுவுக்குச் செலுத்தும்படி அல்லது திருப்பிச் செலுத்தும்படி பணிக்கலாம்."

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) ஓராம் உட்பிரிவின் கீழ் எழுத்திலான அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டிருப்பவரான ஆளொருவர், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகையை அதற்கெனக் குறிக்கப்பட்ட காலத்தினுள் செலுத்தத் தவறியுள்ளாரென, தகுந்த விசாரணையின் பின்னர் கமநலச் சேவைகள் குழுவொன்று திருப்தியடைகின்றவிடத்து, அத்தகைய தொகையானது, எந்தக் கமத்தொழிற் காணிப்பரப்புத் தொடர்பில் அறவீடானது செலுத்தப்பாற்பாலதாகவுள்ளதோ அந்தக் காணிப்பரப்பு அல்லது அதனைச் செலுத்தத் தவறிய ஆளினால் சொந்தமாக அல்லது இருப்பாட்சியில் வைத்திருக்கப்படும் கமத்தொழிற் காணிப் பரப்பு அமைந்திருக்கின்ற இடத்தின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் நீதிவான் நீதிமன்றத்துக்கு, அதற்கென அத்தகைய குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் செய்யப்படும் விண்ணப்பமொன்றின் மீது, அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் குற்றப்பணம் ஒன்றென்றுற்போன்று அறவிடப்படுதல் வேண்டும்.";

(இ) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "ஏக்கர் அறவீட்டை" என்ற சொற்களுக்குப் பதிலாக, "இடப்பரப்பு அறவீட்டை அல்லது கடனை" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அத்தகைய எண்ணிக்கையினரான" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பெயர் மூலம் அல்லது பதவி மூலம் அத்தகைய எண்ணிக்கையினரான" என்று இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

" (ஈ) ஐம்பத்தாறும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான தவறு எதனையும் புரிகின்றவரான எவரேனும் ஆள்மீது ஆணையாளரால் பணிக்கப்படுகின்றவாறு வழக்குத் தொடரப்படுதல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) ஓராம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(உ) ஆணையாளரின் எழுத்திலான முன் அனுமதியின்றி, ஏதேனும் சிறிய நீர்ப்பாசன எல்லையில் உள்ள நீர்ப் பிடிப்பு இடப்பரப்பில், நீர்க்காவில், ஒதுக்கிடத்தில் அல்லது குளத்தின் படுக்கையில் கமத்தொழில் செய்தால், " அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (3) ஆணையாளரால் அல்லது கமநலச் சேவைகள் குழுவால், இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் அல்லது கட்டளையுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுபவரான, அல்லது முழு அளவில் அல்லது பகுதியளவில் பொய்யானது அல்லது பிழையானது என அவர் அறிந்துள்ளதான ஏதேனும் தகவலை அல்லது ஆவணத்தை இச்சட்டத்தின் நோக்கத்துக்காகக் கொடுத்துதவுபவரான அல்லது காண்பிப்பவரான ஒவ்வொரு ஆளும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 56அ, 56ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தில் 56அ, 56ஆ பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்கள்.

56அ. (1) அந்நோக்கத்துக்கென ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறு, ஒவ்வொரு இடப்பரப்பிலுமுள்ள கமத்தொழிற் காணியின் சொந்தக்காணிப் பயிர்செய்கையாளர்களையும் இருப்பாட்சியாளர்களையும் கொண்டதான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்கள் தாபிக்கப்படலாம்.

(2) கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்கள் ஒவ்வொன்றும், அத்தகைய இடப்பரப்பிலுள்ள கமத்தொழிற் காணியின் சொந்தக்காணிப் பயிர்ச்செய்கையாளர்களில் அல்லது இருப்பாட்சியாளர்களில் ஆகக் குறைந்தது இருபத்தைந்து பேர்களையோ அல்லது

அவ்விடப்பரப்பிலுள்ள சொந்தக் காணிப் பயிர்ச் செய்கையாளர்களின் அல்லது இருப்பாட்சியாளர்களின் மொத்த எண்ணிக்கையில் நாலிலொரு எண்ணிக்கையிரானவர்களையோ கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பால் ஆணையாளருக்கு அதற்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டால், ஆணையாளரானவர் அந்த ஒழுங்கமைப் பதிவு செய்யலாம்;

ஆயின், ஆணையாளரானவர், பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள ஏதேனும் இடப்பரப்பில் கமக்காரர்களின் ஒழுங்கமைப்போன்றை நீர்ப்பாசனம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் ஒருப்பாட்டுடன் பதிவு செய்யலாம்.

(4) இப்பிரிவின்கீழ் பதிவு செய்யப்படும் ஏதேனும் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் நோக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :—

(அ) இடப்பரப்பிற்கான கமத்தொழில் நிகழ்ச்சித் திட்டத்தை வகுத்தலும், அதனை நடைமுறைப்படுத்தலும் ;

(ஆ) கிராம மட்டத்திலான நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுதலும் சிறு நீர்ப்பாசன வேலைகளைப் பழுதுபார்த்தலும்;

(இ) உற்பத்திகளைச் சந்தைப்படுத்துதலும், விதை, உரம் அத்துடன் கமத்தொழில் இரசாயனப் பொருட்களை விநியோகித்தலும்;

(ஈ) அரசாங்க ஒழுங்கமைப்புக்களுக்கும் இடப்பரப்பிலுள்ள கமக்காரர்களுக்குமிடையே ஒத்துழைப்பை ஊக்குவித்தலும் அரசாங்கத்தினதும் அத்தகைய கமக்காரர்களினதும் கமத்தொழிற் செயற்பாடுகளை இயையுபடுத்துதலும்;

(உ) கமத்தொழிற் சமுதாயத்தினருக்கு நன்மை பயக்கக்கூடியதென ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் நடவடிக்கையில் ஈடுபடுதல்.

(5) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களில் பதவி வகிப்பவர்களைத் தெரிவு செய்து, அத்தகைய ஒழுங்கமைப்புக்களின் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கான நடவடிக்கைமுறை; அவற்றினது தத்துவங்கள். அவற்றினால் பேணப்பட வேண்டிய கணக்குகள் அத்துடன் ஆணையாளரினால் அல்லது அதற்கென அவரால் அதிகார

மளிக்கப்பட்ட அலுவலரொருவரால் அத்தகைய கணக்குகளைக் கணக்காய்வு செய்யப்படல் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாம்.

கமக்காரர்களின் ஒழுங்கமைப்புகளைக் கூட்டிணைத்தல்.

56. ஆ. (1) பிரிவு 56அ வில் உள்ளது எவ்வாறிருப்பினும், ஏதேனும் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் ஆணையாளரானவர், அத்தகைய கமக்காரர்களின் ஒழுங்கமைப்பானது—

(அ) அதன் இடப்பரப்பில் கமத்தொழிற் செயற்பாடுகளை வெகுவாக மேம்படுத்தியது அல்லது அத்தகைய இடப்பரப்பில் அத்தகைய செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான திறமை அதற்கிருக்கிறது என ;

(ஆ) அத்தகைய இடப்பரப்பில் உள்ள கமத்தொழில் சமூகத்தின் நல்லெண்ணத்துக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாக இருக்கின்றதென; அத்துடன்

(இ) நீர்ப்பாசன வேலைகளின் பழுதுபார்த்தல்களை பொறுப்பேற்பதற்கான நிதிவளமும் மூலவளங்களும் கொண்டுள்ளதென திருப்திப்பட்டதன் மேல் அத்தகைய ஒழுங்கமைப்பை அவர் பதிவுசெய்யலாம்:

ஆயின் ஆணையாளர், நீர்ப்பாசனம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் ஒருப்பாட்டுடன் பாரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழான ஏதேனும் இடப்பரப்பில் உள்ள கமக்காரர்களின் ஒழுங்கமைப்பினைப் பதிவு செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பொன்று பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்தும் அதற்குப் பின்னரும், அத்தகைய ஒழுங்கமைப்பானது இடையறுவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டுமென்பதுடன், பதிவு செய்யப்பட்ட பெயரினால் அது வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம்.

(3) ஆணையாளரானவர், இப்பிரிவின்கீழ்ப் பதிவு செய்யப்படும் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பொன்றினது ஒவ்வொரு பதிவையும் பற்றிய அறிவித்தலொன்றைக் கசெற்றில் வெளியிடுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்படும் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பு ஒவ்வொன்றினதும் நோக்கங்களானவை, 56அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களாக இருத்தல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களில் பதவி வகிப்பவர்களைத் தெரிவு செய்வதற்கும், அத்தகைய ஒழுங்கமைப்புகளின் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கான நடவடிக்கைமுறை, அவற்றினது தத்துவங்கள், அவற்றினால் பேணப்படவேண்டிய கணக்குகள் அத்துடன் ஆணையாளரினால் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரால் அத்தகைய கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுதல் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாம்.

(6) ஆணையாளரானவர், கமக்காரர்களின் ஒழுங்கமைப்பானது இரண்டாண்டுகளாகச் செயற்படவில்லையென அல்லது அது அவ்வாறு நடந்துகொண்டதனால் இப்பிரிவின்கீழ் அதன் பதிவை இல்லாதாக்குதல் பொதுமக்கள் நலனுக்குகந்ததெனத் திருப்திப்பட்டால், அவர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், இப்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பினது பதிவை இல்லாததாக்கலாம்.

(7) ஆணையாளர், இப்பிரிவின்கீழ் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பொன்றினது பதிவை இல்லாதாக்கின்றவிடத்து, கூட்டுத்தாபனத்தின் ஒழிப்போனை இருப்பதற்கு ஆளொருவரை நியமித்தல் வேண்டுமென்பதுடன், இவர்—

(அ) கூட்டுத்தாபனத்தின் புத்தகங்களை, ஆவணங்களை, சொத்துக்களை உடைமையில் எடுப்பதற்கு;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை விற்பதற்கு;

(இ) கூட்டுத்தாபனத்தின் கடன் தருநர்களுக்கிடையிலான முந்துரிமை பற்றிய ஏதேனும் கேள்வியைத் தீர்மானிப்பதற்கு;

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராகச்செய்யப்படும் ஏதேனும் உரிமைக் கோரிக்கையை, ஆணையாளரின் முன்னங்கீகாரத்துடன், இணக்கம் செய்வதற்கும்; அத்துடன்

(உ) விதித்துரைக்கப்பட்ட முறையில் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களின் பகிர்வை ஒழுங்கு செய்வதற்கு, தத்துவமுடையவராதல் வேண்டும்.

(8) கூட்டுத்தாபனத்தை ஒழிக்கையில், அதன் நிதிகள், முதலில் ஒழிக்கும் செலவுக்கும், பின் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். ஒழிப்பு முடிந்ததன் பின்னர் எஞ்சியிருக்கும் ஏதேனும் மேன்மிகையானது, 60 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட கமநலச்சேவைகள் நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் சொற்களைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"இப்பிரிவின் நோக்கத்திற்காக "பயிர்ச்செய்கை உரிமைகள்" என்னும் சொல்லமைப்பானது, நெல் சூடடிக்கும் உரிமையையும், நெல்வயலை அணுகும் உரிமையையும் கமத்தொழில் விளைபொருளைக் கையுதிர்க்கும் உரிமையையும் உள்ளடக்கும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்.

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்ற :—

(அ) அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஊ) நாற்பத்தாறும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் இடப்பரப்பு அறவீடாக அறவிடப்பட்ட பணத்தின் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நூற்றுவீதம்"; அத்துடன்

(ஆ) மூன்றும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(3) அத்தகைய நிதியத்தின் பணங்கள், கமநலச் சேவைகள் குழுக்களுக்கு, அவற்றின் கட்டிடங்களையும், வாகனங்களையும் உபகரணங்களையும் பேணுவதற்கும் பழுதுபார்ப்பதற்கும் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கும் பயிற்சியளித்தல், விளம்பரம் செய்தல், ஆய்வுசெய்தல், நில அளவை செய்தல், கடன் திட்டங்கள் அலுவலர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்பாடுசெய்தல் என்பவற்றிற்கும் அத்துடன் பொதுவில், கமநலச்சேவைகள் குழுக்களின் நிர்வாகம், அபிவிருத்தி என்பவற்றிற்கும் இலங்கையில் கமத்தொழில் உற்பத்தியாக்கத்தை மேம்படுத்துதல், அபிவிருத்திசெய்தல் என்பவற்றிற்கும் நிதியுதவியளிப்பதற்காகப் பயன்படுத்தப்படலாம். நிதியத்தின் நிருவாகத்திற்கு ஆணையாளரானவர் பொறுப்பாக இருக்கவேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு, "அச்சட்டத்தின் கீழ்க்கொள்ளவும்படலாம்" என்பதில் தொடங்கி அப்பிரிவின் இறுதிவரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றிற்குப்பதிலாக, "அச் சட்டத்தின் கீழ்க்கொள்ளவும் படலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்.

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) ஓராம் உட்பிரிவின் இறுதியில் பின்வரும் சொற்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

"ஆணையாளர், கமத்தொழில் உற்பத்தியின் அதிகரிப்பிற்கான தேவையைக் கருத்திற்கொண்டு அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படும் அறிவித்தல் மூலம் அத்தகைய அனுமதியை மீளப் பெறலாம்."

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) வேறு ஏதேனும் கமத்தொழில்பயிர் (இ), அத்துடன் அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(6) (அ) ஆளெவரும் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, நீதிமன்றமானது அத்தவறைப் புரிவதில் அல்லது அதுதொடர்பில் பயன்படுத்தப்பட்ட எவையேனும் கருவிகள், சாதனங்கள், பொறித்தொகுதி அல்லது வாகனங்கள், பறிமுதல்செய்யப்படவேண்டும் என்ற கட்டளையை ஆக்கலாம். இப்பிரிவின்கீழ் பறிமுதல்செய்யப்பட்ட ஏதேனும் கருவி, சாதனம், பொறித்தொகுதி அல்லது வாகனம் பறிமுதல்செய்யப்படுவதன்மீது முற்றிலும் அரசுக்கு உரித்தாதல் வேண்டும். அத்தகைய உரித்தாக்கலானது—

(i) பறிமுதற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அல்லது அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றுக்கு எக்காலப் பகுதிக்குள் மேன்முறையீடொன்று செய்யப்படமுடியுமோ அக்காலப்பகுதி முடிவுற்றதன்பின்; அல்லது

(ii) பறிமுதற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றுக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, பறிமுதற் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது நிலைநிறுத்தி அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்படுவதன்மீது,

(ஆ) ஆணையாளர், இப்பிரிவின்கீழ் அரசுக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் கருவியை, சாதனத்தை, பொறித் தொகுதியை அல்லது வாகனத்தை தமது உடைமையில் எடுத்தல் வேண்டும் என்பதுடன், அவர் பொருத்தமெனக் கருதக்கூடியவாறு அதனை விற்காலாம் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கலாம். அத்தகைய விற்பனையில் பெறப்படும் தொகையானது திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

(இ) அப்பிரிவின் (4)ம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலம் :

(4) ஏதேனும் நெற்காணி இடப்பரப்பு—

(அ) எவரேனும் ஆளினால் (1)ம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகப் பயன்படுத்தப்படுமாயின்; அல்லது

(ஆ) அதன் விவசாயியால் (2)ம் உட்பிரிவின் ஏற்பாட்டிற்கு இணங்கவல்லாது வேறு வகையில் அதில் காத்தொழில் செய்யப்பட்டால்,

அந்த ஆள் அல்லது அந்த விவசாயி, விடயத்திற்கேற்றவாறு, தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் அத்துடன் குற்றப்பணத்தின் கொடுப்பனவில் தவணை தவறுகையில் மூன்று மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனைக்கும் அத்துடன் குற்றத்தீர்ப்பிற்குப் பின்னரும் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படுமிடத்து குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படுகின்ற ஒவ்வொரு தினத்திற்கும் விடயத்திற்கேற்றவாறு அந்த ஆள் அல்லது அந்த விவசாயி, நூறு ரூபா குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 62அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"நெற்காணிகளை அதிகாரமளிக்கப்படாமல் நிரப்புதல்.

62அ (1) ஆணையாளரின் எழுத்திலான அனுமதியுடனல்லாத ஏதேனும் நெற் காணியை ஆளெவரும் நிரப்புதல் ஆகாது. முற்போந்த ஏற்பாட்டை மீறி நடக்கின்ற ஆளெவரும் குற்றமொன்றைப் புரிபவராவர்.

(2) ஆளெவரும் (1) ஆம் உட்பிரிவுக்கு முரணாக செயல்படுகின்றார் என ஆணையாளருக்கு அறிவிக்கப்படுமிடத்து, ஆணையாளரானவர் அத்தகைய பரப்பு அல்லது அதன் ஏதேனும் பாகம் அமைந்துள்ள இடத்தின்மீது நியாயாதிக்கத்தினைக்கொண்ட நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு, இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் உள்ளவாறு—

(அ) அவரே கமநலச் சேவைகள் ஆணையாளர் எனவும் ;

(ஆ) விண்ணப்பத்திற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட காணி நெற்காணி எனவும் ;

(இ) விண்ணப்பத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனவான ஆள், 1979 ஆம் ஆண்டின், 58 ஆம் இலக்க கமநல சேவைகள் சட்டத்தின் 62அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கு முரணாக செயற்படுகின்றார் எனவும்,

அத்துடன் மேலே சொல்லப்பட்ட (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணுகச் செயற்படுவதிலிருந்து அவரை அல்லது அவரது முகவரை அல்லது சேவையாளர்களை தடை செய்யும் கட்டளையொன்றை வழங்குமாறு வேண்டியும் எழுத்திலான விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

(3) இப்பிரிவின் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விண்ணப்பத்தில் தரப்பட்ட விடயங்களை மெய்ப்படுத்துகின்ற சத்தியக்கடதாசியொன்றினல் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன்மேல், நீதிவான் உடனடியாக விண்ணபத்தில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆளுக்கு, அவ்வழைப்பாணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியில் (அத்தகைய அழைப்பாணை வழங்கப்படும் தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குப் பிந்தாத ஒரு தேதி) நீதிமன்றத்தில் தோன்றி, ஏன் அவர் அல்லது அவரது வேலையாட்கள் அல்லது முகவர்கள் விண்ணப்பத்திற் கோரப்பட்டவாறு தடைசெய்யப்படக்கூடாது என்பதற்கும் காரணம் காட்டுமாறு அழைப்பாணை வழங்குதல் வேண்டும்.

(5) எந்த ஆளுக்கு அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்டதோ, அந்த ஆள், அந்த அழைப்பாணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று நீதிமன்றத்தில் தோன்றத் தவறினலோ அல்லது அத்தகைய கட்டளை வழங்கப்படுவதற்கெதிராக அவர் காரணம் எதுவும் காட்டுவதற்கில்லை என அறிவித்தாலோ, நீதிமன்றமானது உடனடியாக விண்ணப்பத்தில் கோரப்பட்டவாறு கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும்.

(6) எந்த ஆளுக்கு அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்டதோ, அந்த ஆள், முறையாக நீதிமன்றத்தில் தோன்றி அத்தகைய கட்டளை வழங்கப்படுவதற்கெதிராகத் தாம் காரணம் காட்டுவதற்குண்டு என அறிவித்தால், நீதிவான் நீதிமன்றமானது, உடனடியாக வழக்கைத் தொடங்கலாம் அல்லது பிந்திய தேதியொன்றில் விசாரணைக்கு என வழக்கை ஒத்திவைக்கலாம்.

(7) நீதிவான் நீதிமன்றமானது விண்ணப்பத்தை உறுதிப்படுத்துமாறு ஆணையாளரிடமிருந்து ஏதேனும் சான்றைக் கோருவதற்குத் தகுதியுடையதாதல் ஆகாது.

(8) விசாரணையின் பின்னர், நீதிவானுனவர் காரணங் காட்டும் ஆளுக்கு நெற் காணிப்பரப்பை நிரப்புவதற்கு சட்டமுறையான அதிகாரமுண்டு என்பதில் திருப்தியுறுவிட்டால் அவர், இப்பிரிவுக்கு முரணுன செயலெதனையும்

செய்வதிலிருந்து அத்தகைய ஆளை அல்லது அவரது சேவையாளர்களை அல்லது முகவர்களைத் தடைசெய்யும் கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(9) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் தவறொன்றுக்கு ஆளெவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தவறு புரிவதில் அல்லது அது தொடர்பில் பயன்படுத்தப்பட்ட எவையேனும் கருவிகள், சாதனங்கள், எந்திரத் தொகுதி அல்லது வாகனங்கள் என்பன பறிமுதல் செய்யப்படல் வேண்டுமென நீதிமன்றம் கட்டளையிடலாம். 62அ ஆம் பிரிவின் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய பறிமுதலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

இன் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(எ) எந்த நடவடிக்கைகள், அவை

(i) 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நெற் காணிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கமநலச் சேவைகள் ஆணையாளரின் அல்லது மீளாய்வுச் சபையின் முன்னிலையில் ;

(ii) 1973 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, கமத்தொழிற் காணிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கமத்தொழில் நியாய சபையின் முன்னிலையில் அல்லது

(iii) இச்சட்டத்தின் 63 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், தொடங்கப்பட்டு முடிவாக்கப்பட்டவையும் அத்துடன், அவை தொடர்பாக மேலே சொல்லப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கோ அல்லது உயர் நீதிமன்றத்திற்கோ மேன்முறையீடுகள் எவையும் செய்யப்படாதிருக்கின்றவையும் அல்லது மேன்முறையீடுகள் செய்யப்பட்டுத் தள்ளுபடி செய்யப்பட்டும் அத்துடன் அத்தகைய நடவடிக்கைகளில் ஆக்கப்பட்ட கட்டளைகளை செலவுக்கிடுவதற்கென அத்தகைய சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின்கீழ் நீதிவான் நீதிமன்றத்தில் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படாதிருக்கின்றனவான நடவடிக்கைகள் யாவும் தொடர்பில்; அத்தகைய நடவடிக்கைகளில் ஆக்கப்பட்ட கட்டளைகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை இச்சட்டத்தின் நேரொத்த ஏற்பாடுகளுக்கமைய வலுவுக்கிடப்படுதலும் வேண்டும்."

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) "கமத்தொழில்" என்பதன் வரைவிலக்கணத்தின் முடிவில் பின்வருவதனைச் சேர்த்துக்கொள்வதன் மூலமும் :—

"(iv) தேனீ வளர்த்தல் அத்துடன் நன்னீர் மீன் வளர்ப்புத் தொழில்" ; அத்துடன்

(ஆ) "கமத்தொழிற் செயற்பாடு" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"கமத்தொழிற் செயற்பாடு" என்பது கமத்தொழிலை உள்ளடக்கும் ஏதேனும் செயற்பாடு எனப்பொருளாவதுடன் கமத்தொழில் உள்ளீட்டுப் பொருட்களின் வழங்கலையும், அத்தகைய செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் எந்திரத் தொகுதி, சாதனங்கள் என்பவற்றின் பயன்பாட்டையும் அத்துடன் சிறு நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட ஏதேனும் செயற்பாட்டையும் உள்ளடக்கும்".

41. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

(பிரிவு 62அ)

அட்டவணை

தடைக் கட்டளைக்கான விண்ணப்பம்

........................................ நீதிவான் நீதிமன்றத்திற்கு;

(அத்தகைய நீதிமன்றத்தின் பெயரைக் குறிப்பிடவும்)

கமநலச் சேவைகள் ஆணையாளர் ................................................ (பெயரைக் குறிப்பிடவும்) ஆகிய நான் 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க கமநலச் சேவைகள் சட்டத்தின் 62அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இவ்விண்ணப்பத்தின் மூலம்—

(அ) பின்வரும் விடயங்களை எடுத்துரைக்கின்றேன், அதாவது :—

(i) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கமநலச் சேவைகள் ஆணையாளர் நானாவேன் ;

(ii) இவ்விண்ணப்பத்திற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட காணி புந்நற்காணியாகும் ;

(iii) ................................. என்னும் இடத்தைச் சேர்ந்த ................................. என்பவர், 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தின் 62அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கு முரணுகச் செயல் படுகின்ருர் ;

(ஆ) சொல்லப்பட்ட ................................. என்பவரை அல்லது அவரது முகவர்களை அல்லது சேவையாளர்களை, கமநலச் சேவைகள் சட்டத்தின் 62அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் சொல்லப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணுகச் செயல்படுவதிலிருந்து தடைசெய்யும் கட்டளையொன்றை வழங்குமாறு வேண்டுகின்றேன்.

————,

கமநலச் சேவைகள் ஆணையாளரின் ஒப்பம்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ............................................ அட்டவணை.

(இங்கே. மாவட்டம் உட்பட அமைவிடத்தைக் குறிப்பிட்டு காணியை விவரிக்கவும்).

————,

கமநலச் சேவைகள் ஆணையாளரின் ஒப்பம்.

தேதி :————.